பக்கங்கள்: பதினாறு

பொதுசன நூலகம்

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 07 வியாழக்கிழமை (19.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:085

## பாதுகாப்பு வலயத்தில் நேற்றைய பயங்கரம்

# 10 மணி நேர இடைவெளியில்

# 129 பேர் முல்லையில் பலியெடுப்பு!

### நித்திரையில் வைத்துக் குடும்பம் குடும்பமாகக் கொலை

கொழும்பு, பெப்ரவரி 19

**முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான புதுக்குடியிருப்பு, மாத்தளன், அம்பலவன்பொக்கணை, இடைக்காடு ஆகிய பகுதிகளில் பத்து மணி நேர இடைவெளியில் நேற்று - புதன்கிழமை - அகோரமான ஷெல் தாக்குதல்களாலும் விமானக் குண்டு வீச்சுக்களாலும் 129 பேர் பலி கொள்ளப்பட்டனர்.**

நேற்று அதிகாலை 2 மணியிலிருந்து 5 மணி வரையும் நடத்தப்பட்ட கொத்துக் குண்டுகள், பல்குழல் குண்டுகளினால் நித்திரையில் இருந்த 108 பேர் உயிரிழந்தனர். பின்னர் நண்பகல் 12.30 மணியளவில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்களில் 21 மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. அவர்களில் பலர் குடும்பம் குடும்பமாக மாண்டதாக இணையத் தளங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

### படையினர் இப்போது புதுக்குடியிருப்பு நகரில்

கொழும்பு, பெப். 19

புதுக்குடியிருப்பு நகரை படையினர் அண்மித்துவிட்டனர் என இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் 100 சதுரகிலோ மீற்றர் பரப்பளவிற்குள் முடக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் கூறினார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

### பொதுமக்களை இலக்கு வைத்து தாக்குவதாகக் கூறப்படுவது புனைகதைகள் என்கிறார் உதய நாணயக்கார

கொழும்பு, பெப்.19

முல்லைத்தீவில் பொதுமக்களை இலக்கு வைத்து தாக்குதல் எதுவும் நடத்தப்படவில்லை. பொதுமக்கள் கொல்லப்படுவதாக வெளிவரும் தகவல்கள் புனையப்பட்ட கதைகள்.

இப்படிக்கூறியுள்ளார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதியில் நேற்று அதிகாலை படையினரின் ஷெல் தாக்குதலில் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக வெளிவரும் தகவல்கள் தொடர்பாக அவரிடம் ஏ.பி. செய்தியாளர் கேட்டபோது-

பொதுமக்களை இலக்கு வைத்து தாக்

(16 ஆம் பக்கம் பார்க்க)

### அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வந்த ஷெல்களே வீடுகள் மீது விழுந்தன

#### வைத்திய அதிகாரி சொல்கிறார்

கொழும்பு, பெப்.19

நேற்று புதன்கிழமை அதிகாலை படையினரின் ஆட்லறி ஷெல்கள் வீடுகளின் மீது வீழந்து வெடித்தால் 38 பேர் கொல்லப்பட்டனர்; 140 பேர் காயமடைந்தனர். ஷெல்கள், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதி

(16 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே கல்விச்சுடர்**
**தரம் 5 மாணவருக்கான தயார்படுத்தல் பரீட்சை வினாத்தாள் -II**

### தமிழகத்தில் ஈழத்தமிழருக்காக நேற்றும் ஒருவர் தீக்குளிப்பு

#### 7 மாதக் குழந்தையின் தந்தை தமிழ் வேந்தன் அவர்

கடலூர், பெப். 19

சாவின் விளிம்பில் நின்று ஊசலாடும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் நேற்றும் ஒருவர் தீக்குளித்துள்ளார்.

கடலூர் மாவட்டம் கடலூர் பழைய நகரம் குழந்தை கொலனியைச் சேர்ந்த சோதி என்று அழைக்கப்படும் தமிழ்வேந்தன்

(16 ஆம் பக்கம் பார்க்க)




# யுத்த நிறுத்தம் செய்யும் பேச்சுக்கே இடமில்லை; கூட்டமைப்பின் கோரிக்கை அரசால் நிராகரிப்பு!

கொழும்பு, பெப்ரவரி 19

அரசும் விடுதலைப் புலிகளும் உடனடியாக யுத்தநிறுத்தம் செய்யவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த வேண்டுகோளை இலங்கை அரசு நிராகரித்துவிட்டது.

புலிகளுடன் யுத்தநிறுத்தம் செய்வது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார் அமைச்சரும் பாதுகாப்பு

(16 ஆம் பக்கம் பார்க்க)

### பிரணாப் முகர்ஜியின் கருத்தால் தமிழக எம்.பி[illegible]கள் அமளிதுமளி

#### மக்களவை நேற்று இரு தடவைகள் ஒத்திவைப்பு

புதுடில்லி, பிப். 19

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி இந்திய மக்களவையில் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பா.ம.க., ம.தி.மு.க. எம்.பிக்கள் களேபரத்தில் ஈடுபட்டதால் ஏற்பட்ட அமளியை அடுத்து மக்களவை இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டது. மக்களவையில் நேற்று இலங்கைப் பிரச்சினை தொடர்பாக வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி அறிக்கை ஒன்றை அளித்தார்.

அந்த அறிக்கையில் இலங்கையில் அப்பாவித் தமிழர்களுக்கு அதிக சேதம் விடுதலைப் புலிகளாலேயே ஏற்பட்டுள்ளது என்று

(16 ஆம் பக்கம் பார்க்க)

### ஐ.நா.மனிதாபிமான அதிகாரி இன்று இலங்கைக்கு விஜயம்

கொழும்பு, பெப். 19

ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் இலங்கைக்கு இன்று திடீர் விஜயம் ஒன்றை மேற்கொள்கிறார்.

இலங்கைக்கான இருநாள் விஜயத்தின் போது அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட முக்கிய அதிகாரிகள் பலரை சந்திப்பதுடன் இலங்கையின் மனிதாபிமான நிலைவரம் குறித்து ஆராய்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2007 இல் ஜோன் ஹோம்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். அப்போது அவரது இலங்கை விஜயம் மிகுந்த சர்ச்சையை உருவாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முடியாது என்கிறது இந்திய அரசு

## புலிகளை ஆயுதங்களை கைவிட மீண்டும் வலியுத்துகிறார் முகர்ஜி



புதுடில்லி, பெப்.19

இலங்கை இறைமையுள்ள நாடென்பதால் இராணுவ நடவடிக்கையை நிறுத்துமாறு அந்த நாட்டுக்கு அழுத்தம்கொடுக்கமுடியாது.

குறிப்பிட்ட நடவடிக்கையொன்றை மேற்கொள்ளுமாறு இறைமையுள்ள நாடொன்றைக் கேட்டுக் கொள்வதற்கு இந்தியாவுக்கு எந்த வழி முறையும் இல்லை. சாத்தியமுமில்லை.

விடுதலைப் புலிகளை ஆயுதங்களைக் கைவிடுமாறு மீண்டும் கேட்டுக்கொள்கிறோம். மோதல் நடைபெறும் பகுதியில் சிக்கியுள்ள மக்களை வெளியேற்றுவதில் கொழும்புடன் சேர்ந்து செயற்படுவதற்கும் இந்தியா தயார்.

இந்திய மக்களவையில் நேற்று புதன் கிழமை உரையாற்றுகையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி மேற் கண்டவாறு கூறினார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் கடும் எதிர்ப்பிற்கு மத்தியில் உரையாற்றிய பிரணாப் முகர்ஜி மேலும் தமது உரையில் குறிப்பிட்டவை வருமாறு:-

இலங்கையில் முன்னெடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளமையால், விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களைக் கைவிடுவது மற்றும் தமது பிடியில் சிக்கியுள்ள மக்களை விடுவிப்பதன் மூலம் தமிழ் சமூகத்தின் நலனுக்குப் பங்களிப்புச் செய்யலாம்.

விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட ஒன்று. அவர்கள் தமிழ் சமூகத்திற்கு ஏற்கனவே பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்களை வெளியேற்றும் விடயத்தில் இலங்கை அரசு மற்றும் செஞ்சிலுவை சர்வதேசக்குழுவுடன் இணைந்து பணியாற்ற இந்தியா தயாராகவுள்ளது. பொதுமக்களின் பாதுகாப்பு, சோதனையிடுதல், புனர்வாழ்வு போன்றவற்றிற்கு இலங்கையும் செஞ்சிலுவைக்குழுவும் பொறுப்பேற்கவேண்டும்.

**35,000 மக்கள் வெளியேறி உள்ளனர்**

கடந்த இரு வாரங்களில் 35 ஆயிரம் பொதுமக்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலிருந்து வெளியேறியுள்ளனர்.

எனினும், இந்த மோதலிலிருந்து தப்புவதற்கு முனையும் மக்கள் மோதலின் நடுவில் சிக்கியுள்ளனர். சமீபத்தில் விடுதலைப் புலிகளால் தடுக்கப்பட்டுள்ளனர்; சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள பொதுமக்கள் மற்றும் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் நிலையே ஆழ்ந்த கவலைக்குரிய விடயமாகவுள்ளது. விடுதலைப் புலிகள் அவர்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்துகின்றனர்.

பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் நலன் குறித்த இந்தியாவின் ஆழ்ந்த கரிசனையே மனிதாபிமான நிலை மேலும் மோசமடைவதைத் தடுப்பதில் அ... ஆர்வத்துடன் பங்களிப்புச் செய்ய விரும்புவதற்குக் காரணம்.

அதேவேளை, வடக்கு, கிழக்கில் இலங்கை அரசு சாதாரண ஜனநாயக அரசியல் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**இயல்பு வாழ்வை ஏற்படுத்த கிடைத்துள்ள சந்தர்ப்பம்**

எமது கருத்துப்படி 23 வருட மோதலுக்குப் பின்னர் வடமாகாணத்திலும் முழு இலங்கையிலும் இயல்பு வாழ்வை ஏற்படுத்துவதற்கு கிடைத்துள்ள அரசியல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவது குறிப்பிடத்தக்க ஆரம்ப நடவடிக்கையாக அமையும்.

இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கு வலுச் சேர்ப்பதற்காகவே 13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. அரசமைப்பின் 13ஆவது திருத்தத்திற்கும் அப்பால் செல்வது மிகவும் சிறப்பானதாக அமையும்.

இலங்கையின் வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கவேண்டியுள்ள புனர்வாழ்வு, புனர்நிர்மானப் பணிகளில் உதவ இந்தியா தயாராகவுள்ளது- என்று தெரிவித்தார்.

தனது உரையில் ஏதேனும் தவறுகள் இருந்தால் அதனைத் திருத்திக்கொள்ளத் தயார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(அ-சி)

## பேடன்பவல் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப்.19

இலங்கை சாரணியர் மன்ற யாழ். மாவட்ட பிரிவின் ஏற்பாட்டிலான பேடன் பவல் நினைவு நாள் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை இடம் பெறவுள்ளது.

யாழ்., வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய வலயங்களுக்கான நிகழ்வுகள் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையிலும் -

வலிகாமம் வலயத்துக்கான நிகழ்வு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் - இடம்பெறவுள்ளன என யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி என். தர்மகுலசிங்கம் தெரிவித்தார். (1)

## புண்ணியகிராம நிகழ்ச்சி நாளை புங்குடுதீவில்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் தீவக புண்ணய கிராம நிகழ்ச்சித் திட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புங்குடுதீவு, தொண்டர் திருநாவுக்கரசு அறநெறிப் பாடசாலை சர்வதேச சேவை வளாகத்தில் நடைபெறும்.

திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் மேற்படி திணைக்கள கணக்காளர் ஜீ.காண்டீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக வேலணை பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தி.மீரா கலந்து கொள்வார்.

விரிவுரைகளை எ.தங்கமயில், புகன் ஶ்ரீந்திரன், பொ.சந்திரவேல், கு.பாலசண்முகன் ஆகியோர் நிகழ்த்துவர். (1-160)


எமது புதிய வெளியீடு

சுந்தர் C

நடிக்கும் "பெருமாள்"

அவுட் லேண்டர் (தமிழாக்கம்)

FLASH CD HOUSE

No: 01, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## சிவராத்திரி நாளில் ஒன்றிணைந்து பிரார்த்திக்குக

### நல்லை ஆதீன முதல்வர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், பெப்.19

எதிர்வரும் சிவராத்திரி தினத்தன்று இந்துக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆலயங்களில் நாட்டில் பூரண அமைதியும் நிரந்தர சமாதானமும் ஏற்படப் பிரார்த்தனை செய்யவேண்டும் என்று நல்லை ஆதீன முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இந்துக்களின் அதி விசேட விரத தினமாகிய எதிர்வரும் திங்கட்கிழமை சிவராத்திரி தின நாளில் இந்து மக்கள் ஒன்றிணைந்து நாட்டில் பூரண அமைதியும் நிரந்தர சமாதானமும் ஏற்படப் பிரார்த்தனை செய்யுமாறு வேண்டுகிறோம்.

மகா சிவராத்திரி விரதத்தை முறையாக அனுஷ்டித்து சகல சௌபாக்கியங்களையும் பெற்று எம்பெருமானின் திவ்ய பேரருட்கடாட்சத்துக்குப் பாத்திரமாகுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது.

(அ)


எமது நிறுவனத்தில் கணினிப்பட்டப்படிப்பைக் கற்றுக்கொண்டிருக்கும் மற்றும் புதிதாக இணையவிருக்கும் மாணவர்களே!

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) ஏற்றுக்கொள்ளக்கூடிய பொதுநலவாய நாடு ஒன்றில் உள்ள (Commonwealth Country) பல்கலைக்கழகம் ஒன்று எமது மாணவர்களுக்கு **Degree Certificate** யை வழங்குவதற்கு அனுமதியளித்துள்ளது என்பதனை மிகவும் மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் அறியத்தருகின்றோம்.

**North Lanka IIT**

Main Street, Chankanai.

New College of Higher Studies No:95, Ariyakulam Jaffna

North Lanka IIT is your right choice for your Degree Education






செல்லகுட்டியை வாழ்த்துவோர்:

அப்பா, அம்மா

அப்பப்பா, அப்பம்மா

பெரியம்மா குடும்பம்

செல்வி அத்தை குடும்பம்

காண்டி மாமா குடும்பம்

ஜீவி அத்தை குடும்பம்

UNIT


## விவாதமேடை நிகழ்வு

யாழ்ப்பாண மாவட்ட உயர்தரத் தமிழ் மாணவர்களின் பேச்சாற்றலையும், விவாதத்திறனையும் ஊக்குவித்து வளர்த்தற் பொருட்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக் கலை மாணவர் மன்றமும், விவாத மன்றமும் பாடசாலைகளுக்கிடையேயான விவாத மேடைநிகழ்வு ஒன்றை நிகழ்த்தி வருகின்றன.

இதன் தொடக்க நிகழ்வாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கும் இடையே 'இலக்கியம் காட்டிய வழியில் வாழ்கிறோமா? வாழவில்லையா?' எனும்விடயம்குறித்து இன்று வியாழக்கிழமை நண்பகல் 12.45 மணிக்குஇந்து மகளிர் கல்லூரியில் விவாத "களம்" நடைபெறவுள்ளது.

நடுவராக யாழ். பல்கலைக்கழக [illegible] நம்பி கலந்து கொள்வார். (1)


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை பொன்னையா



வேலணை கிழக்கு, 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பொன்னையா நேற்றுமுன்தினம் (17.02.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் (ராசாத்தி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரேசு - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகனும் ஆனந்தராசா, காலஞ்சென்ற இந்துமதி மற்றும் மதிவதனி (மதி), சசிகலா (நோர்வே), சுமதி, நாகேஸ்வரி (சுபா - கொழும்பு), புவனேஸ்வரன் (உதவி அரசாங்க அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் நேசமலர், ஜெகதீஸ்வரன் (ஈசன் - மகாமாரி குளிரகம், வங்களாவடி), புஸ்பராசா (நோர்வே), யோகரத்தினம் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), கணேசமூர்த்தி (கபில் - கொழும்பு), சுபாஜினி (உதவி அரசாங்க அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறை) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காசிலிங்கம் (கனடா), காலஞ்சென்ற தவமணி மற்றும் சித்திரவடிவேல் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரேகன், நிஷாந்தன், சுதர்சினி, ரூபிணி, ருகாந்தன் (நோர்வே), அஜீபன், கஜமுகன், கவுதப்பிரியன், அபிநயா, பகீரதன், நிதுஷன், டக்சிகா, விதுஷா, றம்மியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.02.2009) புதன்கிழமை வவுனியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"மந்திர மகால்",*
*வேலணை வடக்கு, வங்களாவடி.*

தகவல்:
மக்கள், மருமக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# உண்மையை அம்பலப்படுத்துவது சர்வதேச ஊடகங்களின் கடமை

வன்னியில் மிக மோசமான மனிதப் பேரவலம் கட்டவிழ்கின்றது. ஆட்லறிகள், பல்குழல் ஏவுகணைகள், வான் வழித் தாக்குதல்களால் தினசரி நூறுபேர்வரை உயிரிழந்தும் பல நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தும் போகும் மிருகத்தனமான கொடூரம் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது.

யுத்தம் ஒரு புறம். மறுபக்கத்தில், அப்பாவித் தமிழர்கள் சிந்தும் குருதி இரத்தப் பேராறாக ஓடும் ஆக்கிரமம் தொடர்கின்றது.

''தினசரி தொடரும் விமானக்குண்டுவீச்சு மற்றும் ஆட்லறி, பல்குழல் பீரங்கித் தாக்குதல்களில் கடந்த இரண்டு மாத காலத்தில் இரண்டாயிரத்துக்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். சுமார் நாலாயிரத்து ஐந்நூறுக்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் படுகாயமடைந்திருக்கின்றனர். அவர்களில் பலர் கை, கால்களை இழந்து நிரந்தர அங்கவீனமாகியிருக்கின்றார்கள்.'' - என்ற அதிர்ச்சித் தகவலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் பகிரங்கப்படுத்தி உள்ளார்.

யுத்த முற்றுகைக்குள் சிக்கிக் கிடக்கும் முல்லைத்தீவில் தினசரி படுகொலை செய்யப்படும் அப்பாவிப் பொதுமக்களின் எண்ணிக்கை வீதம், இப்போது யுத்தத்தின் கோரம் தீவிரமடையத் தீவிரமடைய அதிகரித்து வருகின்றது. கடந்த மாதங்களில் தினசரி சில டசின் கணக்கில் இருந்த இந்த எண்ணிக்கை இப்போது தினசரி நூறைத் தாண்டிச் சென்றுகொண்டிருக்கின்றது.

யுத்தத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அப்பால் அங்கு கொல்லப்படும் அப்பாவிப் பொதுமக்கள் அனைவருமே தமிழர்கள். ஈழத் தமிழர்களன்றி வேறு எவருமில்லை.

தமிழர்களை மீட்கும் 'மனிதாபிமான நடவடிக்கை' என்ற பெயரில் இலங்கை அரசுப் படைகள் முன்னெடுக்கும் இந்தக் கொடூர யுத்தத்தில் இப்படி அப்பாவித் தமிழர்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்படுவதும், தினசரி நூற்றுக்கணக்கானோர் கை, கால் போன்ற அவயவங்களை இழந்து அங்கவீனர்களாகும் வகையில் படுகாயமுறச் செய்யவைக்கப்படுவதும் திட்டமிடப்பட்ட இனவழிப்பன்றி வேறு எதுவாக இருக்கமுடியும்?

ஆனால் உலக நாடுகளில் இடம்பெறக்கூடிய இத்தகைய திட்டமிடப்பட்ட இனவழிப்பு நடவடிக்கைகள் குறித்து விரைந்து - அவசரமாக - உடனடியாக - ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய தார்மீகக் கடப்பாடும் பொறுப்பும் கொண்ட ஐக்கிய நாடுகள் சபை போன்ற கட்டமைப்புகள், 'ஒரு தேசத்தின் இறைமையை மதித்தல்' என்ற பாதுகாப்புச் சுவருக்குப் பின்னால் போய் ஒளிந்து கொண்டு நின்று, இந்த இனவழிப்புக் கொடூரத்தை வேடிக்கை பார்க்கின்றன. இன்றைய கட்டத்தில் விரைந்து செயற்பட வேண்டிய தனது பொறுப்பை நிறைவேற்றாமல் - இந்த இக்கட்டான கால கட்டத்திலும் - 'சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தல்' பற்றிய தனது பழைய குற்றச்சாட்டுப் பல்லவியைப் பாடிக்கொண்டிருக்கின்றன இந்த அமைப்புகள்.

இலங்கையில் தமிழினத்துக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் திட்டமிடப்பட்ட அழிப்பு நடவடிக்கைகள் உலகத்தின் கண்களுக்கு தெரியாமல் இருப்பது பெரும் வேதனைக்குரியது.

ஆஸ்திரேலியாவில் காட்டுத் தீயால் நூற்றியறுபது பேர் உயிரிழந்த கோரத்துக்குக் கொடுத்த முக்கியத்துவத்தில் பத்து வீதத்தையாவது முல்லைத்தீவில் தினசரி நூற்றியறுபது பேர் படுகொலை செய்யப்படும் கொடூரத்துக்குக் கொடுப்பதற்கு சர்வதேச ஊடகங்கள் தயாரில்லை.

இந்த இனவழிப்புக் கொடூரம் உலகத்தின் மனச்சாட்சியைத் தட்டாமல் இருப்பது அதனை முன்னெடுக்கும் பேரினவாத மேலாண்மைச் சக்திகளுக்கு மேலும் ஊக்கத்தையும், உத்வேகத்தையும் தந்து நிற்கின்றது என்பது கண்கூடு.

'தானாடாவிட்டாலும் தசை ஆடும்' என்பார்கள். அதற்கமைய ஈழத் தமிழர்களின் பேரவலம் குறித்து இந்திய மக்களும் - குறிப்பாகத் தமிழக மக்களும் - புலம் பெயர் வாழ் தமிழர்களும் கொதித்தெழுந்து குமுறி வருகின்றார்கள்.

ஆனால், பாரத ஆட்சிப் பீடம் இலங்கையில் தொடரும் இன அழிப்பைக் கண்டும் காணாததும் போல புறமொதுக்கி, உதாசீனம் செய்து, அந்தக் கொடூரத்துக்கு ஓர் அங்கீகாரம் தருவதோடு, அந்த இனவழிப்புத் தொடர்பான யுத்தத்துக்கு நேரடி உதவி, ஒத்தாசை வழங்கி, ஒத்துழைத்தும் வருகின்றது எனக் கூறப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் -

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு குறிப்பிடுகின்றமை போல முல்லைத்தீவில் பல லட்சம் மக்கள் வாழ்வா, சாவா என்ற உயிர்ப் போராட்டத்தில் சிக்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களின் உயிர்கள் காப்பாற்றப்பட்டு, மனித நேயம் நிலைநாட்டப்பட வேண்டும் என்றால் - முல்லைத்தீவின் உண்மை நிலைமை உலகுக்கு எடுத்தியம்பப்பட வேண்டும்.

ஊடகங்கள் மூலம் உண்மைகள் அம்பலமாவதைக் கட்டுப்படுத்துவதற்காக அரசு, யுத்தத்தைக் காட்டி ஊடகவியலாளர்களை அந்தப் பக்கம் தலைவைத்துப் படுக்க விடாமல் தடைபோட்டு வருகின்றது.

அதையும் மீறி, தங்களுக்கேயுரிய சிறப்புத் தேர்ச்சிகள், வழிகள்,வசதிகள் மூலம் முல்லையின் அவல நிலையை சர்வதேச ஊடகங்கள் உலகுக்கு எடுத்தியம்பிப் புட்டுப்புட்டு வைக்கவேண்டும்.

அப்போதுதான் உண்மை உலகத்தின் கண்ணை உறுத்தும். நியாயம் சர்வதேசத்தின் மனச்சாட்சியைத் தட்டும். இனவழிப்புக் கொடூரத்தை எதிர்கொண்டபடி அழிந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழினத்துக்கு நீதி கிடைக்கும்.

இது விடயத்தில் தமது கடமையை நிறைவு செய்யுமா சர்வதேச ஊடகங்கள்..............?

# பரீட்சார்த்த மின்விநியோகம் ஆரம்பம்; சீனப் பொறியியலாளர் குழு மீண்டும் வந்தது

யாழ்ப்பாணம், பெப்.19

'நொதேர்ன் பவர்' நிறுவனத்தின் பரீட்சார்த்த மின்விநியோக நடவடிக்கைகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

சீனப் பொறியியலாளர் குழுவினர் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததையடுத்தே பரீட்சார்த்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

குடாநாட்டிற்கான மின்விநியோகத்தின் ஆரம்பக் கட்டப் பணிகளில் ஈடுபட்டுள்ள 'நொதேர்ன் பவர்' நிறுவனத்தினர் 6 மின் பிறப்பாக்கிகளில் 3 மின்பிறப்பாக்கிகளை தற்போது இந்தப் பரீட்சார்த்த மின் விநியோகத்தில் ஈடுபடுத்தியுள்ளனர்.

இந்த நிறுவனத்தின் மின்விநியோகச் சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வந்த சீன நாட்டைச் சேர்ந்த பொறியியலாளர் குழுவினர் தமது நாட்டுப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களையொட்டி கடந்த ஜனவரி மாத நடுப்பகுதியில் விடுமுறையில் நாடு திரும்பியிருந்தனர். இதனால் பரீட்சார்த்த மின் விநியோகப் பணிகள் தடைப்பட்டிருந்தன.

இந்தக் குழுவினர் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததையடுத்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் பரீட்சார்த்த மின்விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் முதல் சாவகச்சேரிப் பகுதிக்கு இந்தப் பரீட்சார்த்த மின்விநியோகம் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(50)

# 54 ஆயிரம் மோட்டார் சைக்கிள்கள் யாழ்ப்பாணத்தில் பாவனையில்!

யாழ்ப்பாணம், பெப்.18

யாழ்.மாவட்டத்தில் 54 ஆயிரத்து 457 மோட்டார் சைக்கிள்கள் பாவனையில் உள்ளதாக யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

யாழ்.மாவட்டத்தில் எழுபது ஆயிரத்து 173 வாகனங்கள் பாவனையில் உள்ளன. அவற்றில் ஆகக் கூடுதலாக ஐம்பத்து நான்காயிரத்து 457 மோட்டார் சைக்கிள்கள் பாவனையில் உள்ளன.

ஏனைய வாகனங்களின் பதிவுத் தரவுகளின்படி மூவாயிரத்து 67 மோட்டார் காரும், மூவாயிரத்து 122 ட்ரக்டர்களும், ஆயிரத்து 802 லான்மாஸ்டர்களும், ஆயிரத்து 925 மோட்டார் லொறிகளும், ஆயிரத்து 118 மினிபஸ்களும், மூவாயிரத்து 503 ஓட்டோக்களும், ஆயிரத்து 179 இரட்டைப் பாவனை வாகனங்களும் பாவனையில் உள்ளன என அவர் தெரிவித்தார்.

(50-9)

# வன்னியிலிருந்து இதுவரை 1185 நோயாளர்கள் திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தகவல்

முல்லைத்தீவில் மோதல்களில் சிக்கி காயமடைந்த ஆயிரத்து 185 பொதுமக்களை திருகோணமலைக்கு அழைத்துச் சென்றுள்ளதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது. கடந்த 10 ஆம் திகதி முதல் நேற்று (18 ஆம் திகதி) காலைவரை இந்த பொதுமக்கள் அழைத்து வரப்பட்டுள்ளதாக செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் பேச்சாளர் சரசி விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

இவர்கள் மூன்று குழுக்களாக திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். முதல் குழுவில் 345 பேரும், இரண்டாவது குழுவில் 400 பேரும், மூன்றாவது குழுவில் 440 பேரும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களை அப்புறப்படுத்தும் இந்தப் பணிகளுக்கு அரசும் விடுதலைப் புலிகளும் இணக்கம் தெரிவித்துள்ளதுடன் எந்தத் தடையுமின்றி பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சரசி விஜேரட்ன கூறியுள்ளார்.

இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்ட நோயாளர்கள் திருகோணமலை, கந்தளாய், பொலநறுவை மற்றும் கண்டி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆரம்பத்தில் அழைத்து வரப்பட்ட 745 நோயாளர்களில் தற்போது 242 பேரே சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

ஏனையோர் வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை 7 வைத்திய அதிகாரிகளும், 12 தாதிகளும், 10 தாதி மாணவர்கள் என்போர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் இருந்தும் 18 வைத்தியர்கள், 20 தாதிமார்கள், 20 தாதி மாணவர்கள் வவுனியா வைத்தியசாலையிலிருந்தும் திருகோணமலை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(50)

# வன்னி நோயாளர்களில் 678 பேர் மட்டுமே திருகோணமலை வைத்தியசாலையில்

முல்லைத்தீவிலிருந்து யுத்தத்தில் காயமடைந்தவர்கள் மற்றும் நோயாளர்கள் என மூன்று தொகுதியாகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் கடல் வழியாக அழைத்து வரப்பட்ட 1185 பேரில் 678 பேரே தொடர்ந்தும் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இறுதியாகக் கிடைத்த வைத்தியசாலை தகவல்களின்படி நோயாளர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் என சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த 1185 பேரில் 218 பேர் நேற்று வரை சிகிச்சை முடிந்து வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தம்பலகாமம் வைத்தியசாலையில் 34 பேரும், கந்தளாய் வைத்தியசாலையில் 84 பேரும், பொலன்னறுவை வைத்தியசாலையில் 86 பேரும், கண்டி வைத்தியசாலையில் 28 பேரும் என 232 பேர் வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.

திருகோணமலை வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள 678 பேரில் 53 பேர் மெதடிஸ்த மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக வைத்தியமனையில் தங்க வைக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அறிவித்துள்ளது.

(50)

# கடந்த ஆண்டு 2,532 பேருக்கு வாகனச் சாரதி அனுமதிப் பத்திரம்

யாழ்ப்பாணம், பெப்.19

யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் கடந்த ஆண்டு இரண்டாயிரத்து 532 பேருக்கு வாகன சாரதி அனுமதிப் பத்திரம் (ஒருவருட தற்காலிக) வழங்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு 4 ஆயிரத்து 369 விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திருந்தனர். அவற்றில் 4 ஆயிரத்து 271 பேர் செய்முறை பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். இதில் இரண்டாயிரத்து 532 பேர் சித்தியடைந்தனர். சித்தியடைந்தவர்களுக்கான ஒருவருடத்திற்கான தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை-

கடந்த ஆண்டு 505 புதிய மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டு அவற்றுக்குரிய இலக்கத்தகடு, வாகன அடையாள அட்டை, வாகன பதிவுச் சான்றிதழ் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன என்றார் அவர். (50-9)

## நாளை

| | |
|---|---|
| மாசி 08 | 20.02.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | ஏகாதசி |
| | பி.இ. 1.24 வரை |
| நட்சத்திரம்: | மூலம் |
| | மு.ப. 11.28 |
| சுபநேரம்: | 06.31- 08.01 |
| ராகுகாலம்: | 11.01 - 12.31 |

# தபால் அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவை நாளை இளவாலையில்

யாழ்ப்பாணம், பெப்.19

யாழ்ப்பாணம் பிரதம தபாலகம் தபால் அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவையை நாளை வெள்ளிக்கிழமை இளவாலைப் பகுதியில் நடத்தவுள்ளது.

ஜி.சி.ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் வசதி கருதி பிரதம தபாலகம் இந்த தபால் அடையாள அட்டை வழங்கும் நட மாடும் சேவையை நடத்தி வருகின்றது.

கடந்த வாரம் இந்த நடமாடும் சேவை மானிப்பாய் பகுதியில் இடம்பெற்றது.

இதில் 600 க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு தபால் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுமாத்தளனில் உணவுப் பொருள்கள் நேற்று இறக்கப்பட்டன

கொழும்பு, பெப்.19

வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்களுக்கான உணவுத் தொகுதியொன்று நேற்று செஞ்சிலுவை சர்வதேசக்குழுவின் கப்பல் மூலம் எடுத்துச்செல்லப்பட்டது. 30 தொன் உலர் உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டன என்று தெரிவித்துள்ள செஞ்சிலுவைக்குழு மாதத்துக்கு 2 ஆயிரத்து 500 தொன் உணவுப் பொருள்கள் தேவையென்றும் குறிப்பிட்டுள்ளது.

திருகோணமலையிலிருந்து புறப்பட்ட உணவுக் கப்பல் முல்லைத்தீவு புதுமாத்தளன் பகுதியில் பொருள்களை இறக்கியது. செஞ்சிலுவைக் குழுவின் உணவுக் கப்ப்லுக்கு இலங்கைக் கடற்படைக் கப்பல்கள் பாதுகாப்பை வழங்கின என்றும் தெரிவிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை

*(பிரபல விவசாயி)*



புற்றளை, புலோலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை (16.02.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இலட்சுமிப்பிள்ளை, சின்னாச்சிப்பிள்ளை முருகேசு வீரகத்திப்பிள்ளை (ஓய்வுபெற்ற இலிகிதர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவக்கொழுந்து, பரமேஸ்வரி, சிவபாக்கியம், சாந்தகுமாரி (கொழும்பு), தவச்செல்வம், காலஞ்சென்ற கமலாதேவி சங்கரலிங்கம் (நில அளவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்), சந்திரகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராமச்சந்திரன் (இளைப்பாறிய வைத்தியசாலை மேற்பார்வையாளர்), வைரவப்பிள்ளை (கொழும்பு), யோகேஸ்வரி, இராஜேஸ்வரி, வசந்தகுமாரி ஆகியோரின் மாமனும் துஷாந்தன் (கல்வியற்கல்லூரி, மட்டக்களப்பு) நிர்மலன் (பல்கலைக்கழகம், வவுனியா), நிருபன் (பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்), வானதி (பிரான்ஸ்), ஜனார்த்தனன், ஜனார்த்தனி, விதுஷன், ஜசிந்தா, திபியா கிருஷியன், பாஸ்கரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் கிருஷா, தனுஷியா ஆகியோரின் பூட்டனும் காலஞ்சென்றவர்களான கந்தையா, கணபதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2009) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணிக்கு பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*புற்றளை,*
*புலோலி.*

(சி/557191)

## சண்டிலிப்பாயில் இன்று பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம், பெப்.19

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் ஊழியர் நலன்புரிச் சங்க பிரிவுபசார விழா இன்று வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு மானிப்பாய் கலாசார மண்டபத்தில் சங்கத் தலைவர் ச.சந்திரமவுலி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலர் திருமதி பு.சிவலிங்கம் கலந்து கொள்கின்றார். இவ்விழாவில் முதியோர் பராமரிப்பு நிலைய மாகாண முகாமை உதவியாளர் கே.ஆரூரன், சாவகச்சேரி நகர சபை மாகாண முகாமை உதவியாளர் க. ஜீவானந்தன், புங்குடுதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலய ஆசிரியர் ந.சசிகுமார் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். (1-7)

## விற்பனைக்கு

கொக்குவில், பொன்னையா வீதியில் 3பக்க மதில், கிணற்றுடன் கூடிய 1 ¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இத்துடன் சிகப்பு நிறமுடைய TVS Fiero F2 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. (JGxxxx)

விவரங்களுக்கு: ந.மகேந்திரராஜா
LINGAA பேக் ஹவுஸ் அன் ரீ அகம்,
555, நாவலர் வீதி, நல்லூர்.

## திருமண சேவை

1973ஆம் ஆண்டு பிறந்த வெளிநாட்டு P.R உடைய கௌரவமான மணமகனுக்கு மணமகள் தேவை. மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு டாக்டர், என்ஜினியர் மணமக்களும் எம்மிடம் உண்டு.

தொடர்புகளுக்கு: துர்க்கா திருமண சேவை
இல.9, சங்கிலியன் வீதி, நல்லூர் யாழ்.
தொ.பே.இல.: 021 4591417

(62819)

## தவறிவிட்டது

அராலி வடக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சின்னப்பு திருநாவுக்கரசு என்பவரின் தே.அ.அ. (291291392 V) (11.02.2009) அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்த மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்துதவவும்.

தொ.பே. 077 6105780, 021 222 8129

## மணமகள் தேவை

சுவீடன் P.R. உடைய தற்போது நோர்வேயில் டிசைனிங் இஞ்சினியராக கடமையாற்றும் 1977ஆம் ஆண்டு சுவாதி நட்சத்திரம் 4ஆம் பாதம் கொண்ட மணமகனுக்கு டாக்டர், இஞ்சினியர், B.Sc. அல்லது சயன்ஸ் படித்த நேசிங் மணமகள் தேவை.

தொடர்பு: 077 6030072 021 224 0042

## தவறிவிட்டது

இணுவில் மேற்கு, இணுவில் என்னும் முகவரியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் கிருபாகிருஷ்ணன் என்பவரது தேசிய அ.அட்டை (801402348 V) விசேட அ.அட்டை (0906011466), அலுவலக அ.அட்டை என்பன அடங்கிய பேஸ் 15.02.2009 அன்று இணுவில் கந்தசாமி கோயிலுக்கும் மருதனார் மடம் திறந்த வெளி அரங்கிற்கும் (தோட்டவீதி) இடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1064 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மிதுனம் 27 40 50 53

17-02-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 400475600 - 400496144

ஜக்பொட் பரிசு ரூபா. 9,383,650/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 221,168 | 20/- | 4,423,360/- |
| 2 இலக்கங்கள் | 20,383 | 40/- | 815,320/- |
| 1 இல. + லக்கினம் | 20,218 | 60/- | 1,213,080/- |
| 2 இல. + லக்கினம் | 1,784 | 200/- | 356,800/- |
| 3 இலக்கங்கள் | 540 | 1000/- | 540,000/- |
| 3 இல. + லக்கினம் | 56 | 10,000/- | 560,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 9,383,650/- | - |
| மொத்தம் | | | 8,508,560/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 264,157 | | 9,008,560/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 9,877,825/-

தொடர் இலக்கம் 500487566 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2009 பெப்ரவரி 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| களுத்துறை | 400493787-8-03 |
| நுவரெலியா | 400476131-0-11 |
| அம்பாறை | 400482611-2-02 |
| கண்டி | 400487113-3-16 |
| கொழும்பு | 400492092-8-43 |


வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் சிவராசா

[ஓய்வு பெற்ற வைத்தியக் கலாநிதி, ஆதார வைத்தியசாலை மந்திகை, பருத்தித்துறை]



வியாபாரிமூலை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், பிரதான வீதி, நெல்லியடி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிவராசா நேற்று (18.02.2009) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சிவக்கொழுந்து தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான செல்வராசா-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் நாகரத்தினம், மங்களேஸ்வரி, சிவபாலன் (திருகோணமலை), அமரர் சிவானந்தர் ஆகியோரின் சகோதரனும் நேசபாக்கியம் (முன்னாள் தாதிய போதனாசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் Dr.சுதர்சன் (களுத்துறை அரசினர் வைத்தியசாலை) அவர்களின் பாசமிகு தந்தையும் றாஜினி (ஆசிரியை,வ/சமளன் அ.த.க.பாடசாலை, வவுனியா) அவர்களின் அன்பு மாமனும் ஓவியா, அபிஷேக் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2009) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரதான வீதி,*
*(மின்சாரசபை அருகில்)*
*நெல்லியடி கிழக்கு, கரவெட்டி.*

தகவல்:
குடும்பத்தினர்.

(82833)

## அரை இறுதியாட்டம்

வலி.வடக்கு பெப்.19

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

ஆட்டத்தில் மல்லாகம்குளமங்கால் ஆபிரகாம் விளையாட்டுக்கழகமும், அளவெட்டி கலைவாணி விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (1-86)

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மநாதன் திருஞானம்



நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் திருஞானம் நேற்று (18.02.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் - பூரணவதி தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான குணரத்தினம், துரைரத்தினம் மற்றும் வாமதேவா, தேவதாசன் (ஜேர்மனி), ராஜகாந்தன் (பிரான்ஸ்), செல்வக்குமாரன் (செயலாளர், நவாலி விவசாய சம்மேளனம்), மோகனராஜன் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2009) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.*

தகவல்: மகன்.


O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான...

DMI வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட கணினி டிப்ளோமா சான்றிதழ்கான கற்கைநெறிகள்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
21/2/2009, 24/2/2009, 28/2/2009
@ 10.00.a.m. 2.30.p.m.

- Diploma in Microsoft Office
- Diploma in PC Application
- Adv. Dip. in Hardware & Networking
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip.in Web Designing & Development
- Dip. in Video Production & Multimedia

Dip. in Computerized Accounting
#Quick Books # Accpack # MYOB
JOIN WITH LEADERS IN ACCOUNTS

Tally Accounting Training



100%

இலவச பாடநூல் மற்றும் இலகு தவணைக் கட்டணவசதி.

முழுமையானதும் தரமானதுமான கணினிக் கல்வி.

DMI COMPUTER EDUCATION

NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மதுபான விற்பனை நிலையம் சுன்னாகம் பொலிஸாரால் கண்டுபிடிப்பு

வலி.வடக்கு,பெப்.19

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் சட்டவிரோதமாக மதுபான விற்பனை செய்யப்படும் நிலையத்தில் இருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான மதுபான வகைகளைக் கைப்பற்றியுள்ளனர்.

யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் விசேட பணிப்புரைக்கு அமைவாக சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.லுடாவை, உதவிப் பொலிஸ் பரிசோதகர் சில்வா, பொலிஸ் சார்ஜன்ட் நந்தகுமார், பொலிஸ் உத்தியோகத்தர் குணசேகரம், குலசூரியா அனுபா ஆகியோர் இந்தத் திடீர் நடவடிக்கையை மேற்கொண்டு மதுபான வகைகளைக் கைப்பற்றியுள்ளார்கள்.

யாழ்ப்பாணம், கச்சேரி கிழக்கு வீதியில் உள்ள மதுபானச்சாலையே பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டு பொருள்கள் கைப்பற்றப்பட்டன. மதுபானச்சாலை உரிமையாளர், ஊழியர் இருவரும் யாழ்.நீதிமன்றில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் கைப்பற்றப்பட்ட பொருள்களுடன் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர். (202)



கைப்பற்றப்பட்ட மதுபான வகைகளுடன் சுன்னாகம் பொலிஸார்.

# திருநெல்வேலி மரக்கறிச் சந்தை புனரமைப்புப் பணிகள் மும்முரம்

யாழ்ப்பாணம்,பெப்.19

திருநெல்வேலி மக்கள் சந்தையின் புனரமைப்புப் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

மீன்சந்தை, மரக்கறிச் சந்தை, வாழைக்குலை விற்பனைச் சந்தை அடங்கலாக மிக பெரியளவிலான மக்கள் சந்தை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தச் சந்தைக் கட்டடத்தின் தோற்ற வரைபடம் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதேசமயம் தற்போதுள்ள மரக்கறிச் சந்தையும் விரைவில் மீள புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-224)

# தென்மராட்சிக் கல்வி வலயத்தில் விசேட தேவையுள்ளோர் கல்வி அலகு திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.19

தென்மராட்சி கல்வி வலயத்தில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விசேட கல்வி அலகு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, கச்சாய் வீதி சக்தியம்மன் வித்தியாலயத்தில் விசேட கல்வி அலகிற்கான பிரிவினை நேற்றுமுன்தினம் சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் ஆரம்பித்துவைத்தார்.

கல்வி அமைச்சின் அனுமதியுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பிரிவுக்கு விசேட கல்வி பயிற்சிபெற்ற ஆசிரியர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

வலய எல்லைப் பகுதியில் விசேட தேவையுடைய மாணவர்கள், இருப்பின் பாடசாலையில் இணைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.




# திருவாசகமுற்றோதல்

யாழ்ப்பாணம்,பெப்.19

மகா சிவராத்திரியை முன்னிட்டு சாவகச்சேரி வாரிவனநாத சிவன் கோவிலில் எதிர்வரும் 23ஆம் திகதி காலை 6 மணி தொடக்கம் திருவாசகமுற்றோதல் இடம்பெறும்.

தென்மராட்சி திவ்விய ஜீவன சங்கத்தினர் திருவாசகமுற்றோதலை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

# இலவச மருத்துவ பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம்,பெப்.19

இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளையினரும் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரும் இணைந்து கைதடி வடக்கு எழுச்சிக் கிராமத்தில் எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி இலவச மருத்துவ பரிசோதனை முகாமினை நடத்தவுள்ளனர்.

கண், மார்புநோய், சத்திர சிகிச்சை ஆகிய வைத்திய நிபுணர்களால் பரிசோதனை நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (202-207)

# இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளை மரண இழப்பீடு வழங்கியது

நவாலி,பெப்.19

மரண இழப்பீட்டிற்கான காப்புறுதி திட்டத்தின் கீழ் இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளை திருமதி கல்யாணி பத்மதேவா என்பவரின் இறப்பிற்கான இழப்பீட்டை வழங்கியுள்ளது.

மகளிர் பொற்கணக்கில் பேணப்பட்ட தொகையின் பத்து மடங்கு பணமாக ரூபா இரண்டு லட்சத்து ஐம்பத்தையாயிரம் ரூபா அமரரின் கணவருக்கு வழங்கப்பட்டுள்ளது. முகாமையாளர் க.இலட்சுமண சர்மா கடந்த வாரம் இந்த இழப்பீட்டுத் தொகையை வழங்கியுள்ளார். (202-100)

# யாழ். ப.நோ.கூ. சங்கத்துக்கு விமானம் மூலம் கோழி இறைச்சி

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு விமானம்மூலம் கோழி இறைச்சி வகைகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

சங்கத் தலைவர் ப.கிரிதரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

பொதியிடப்பட்ட இந்த பிறிமா கோழி இறைச்சிகள் சங்கத்தின் கூட்டுறவு நகர் விற்பனை நிலையங்கள் ஊடாக நுகர்வோருக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பொதிசெய்யப்பட்ட இந்த கோழி இறைச்சி கிலோ 580 ரூபாவாக விற்கப்பட்டு வருகின்றது. (202-224)

# வாகன அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான செயன்முறைப் பரீட்சை நாளை தொடக்கம்

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்குச் செயன்முறைப் பரீட்சை நடைபெறவுள்ளது.

எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய திகதி ஒழுங்கிற்கு ஏற்ப செயன்முறைப் பரீட்சை நடைபெறும்.

ஜனவரி 27, 28 இல் தோற்றியோருக்கு 20ஆம் திகதியும், 29, 30ஆம் திகதிகளில் தோற்றியோருக்கு 21ஆம் திகதியும் - பெப்ரவரி 3ஆம், 10ஆம் திகதிகளில் தோற்றியோருக்கு 23ஆம் திகதியும் காலை 9.30 மணிக்குச் செயன்முறைப் பரீட்சை நடைபெறும்.

செய்ன்முறைப் பரீட்சைக்கான திகதி வழங்கல் மற்றும் புதிய மோட்டார் சைக்கிள் பதிவுக்கான வாகனப் பரிசோதனை என்பன இன்று வியாழக்கிழமை தொடக்கம் நடைபெறும் என யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் தெரிவித்தார். (202-9)

# தென்மராட்சியில் எட்டுப் பேருக்கு சுயதொழில் கொடுப்பனவு

மண்டுவில்,பெப்.19

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த எட்டுப் பேருக்கு வடக்கு மாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்தினால் முதலாம் கட்ட சுயதொழில் நிவாரணக் கொடுப்பனவுக் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தென்மராட்சிப் பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவினர் தெரிவித்தனர்.

பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் தமது ஆள் அடையாள அட்டை, குடும்ப அட்டை என்பவற்றுடன் நாளை வெள்ளிக்கிழமைக்குப் பின் தென்மராட்சிப் பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவினருடன் தொடர்பு கொண்டு கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பா.இந்து (பெரியமாவடி - சாவகச்சேரி), இ.இராசமலர் (கொடிகாமம் வடக்கு), சி.விஜயா (மீசாலை மேற்கு), ஜெ.யசிந்தா (கச்சாய் வீதி, சாவகச்சேரி), ச.நேசரத்தினம் (உசன், மிருசுவில்), பொ.சுபத்திரை (நாவற்குழி தெற்கு, கைதடி), பொ.நல்லசேகரம்பிள்ளை (மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி), இ.எமிலிரோஸ் (கச்சாய் வீதி, சாவகச்சேரி). (202-59)

# வன்னியிலிருந்து 30 குடும்பங்கள் வந்தன

யாழ்ப்பாணம்,பெப்.19

வன்னிப் பகுதியிலிருந்த கடந்த மூன்று தினங்களில் 30 குடும்பங்களைச் சேர்ந்த 103 பேர் அழைத்துவரப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் கொடிகாமம் அரசினர் வித்தியாலய நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கோப்பாய் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் கொடிகாமம் நலன்புரி நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பகல்வரை மிருசுவில், கொடிகாமம் ஆகிய நலன்புரி நிலையங்களில் 484 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 657 பேர் தங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மிருசுவில் நலன்புரி நிலையத்தில் 362 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 142 பேரும் கொடிகாமம் நலன்புரி நிலையத்தில் 122 குடும்பங்களைச் சேர்ந்த 415 பேரும் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-207)

# நீர்வேலி வாழைக்குலைச் சந்தை விற்பனையின்றி வெறிச்சோடியது

யாழ்ப்பாணம்,பெப்.19

நீர்வேலிப் பகுதியில் உள்ள வாழைக்குலை விற்பனைச் சங்கம் வெறிச்சோடிக் காணப்படுகின்றது.

மேற்படி சங்கத்தில் போதியளவு வாழைக்குலைகள் வந்து சேராததினால் காலையிலேயே இந்தப் பகுதி வெறிச்சோடுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வலி.கிழக்குப் பிரதேசத்தில் இருந்து கொண்டுவரப்படும் இந்த வாழைக்குலைகள் இந்தச் சங்கத்தில் விற்கப்பட்டு வருவது வழக்கம்.

அண்மையில் ஏற்பட்ட நிஷா புயலினால் இந்தப் பிரதேசத்தில் வாழைகள் முற்றாக அழிந்து நாசமாகியுள்ளன.

இதனையடுத்து இந்தச் சங்கத்தில் வாழைக்குலைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதோடு அதன் விலையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. (202-224)



பருத்தித்துறை, கரவெட்டிப் பிரதேசங்கள் இணைந்த கொத்தணி அழகியல் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றன.

நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன், கரவெட்டிப் பிரதேச செயலர் ஆகியோர் இணைந்து கண்காட்சியை நாடாவெட்டித் திறந்துவைப்பதையும் முதலிரு படங்களிலும் காணலாம்.

விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தி, பயிற்சி ஆசிரியை திருமதி ஜெயசோதி சந்திரயோகனுக்குப் பரிசில் வழங்குவதை இறுதி இரு படங்களிலும் காணலாம்.

(படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்புறுதிச் சந்தையின் அளவை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபடும் செலிங்கோ ஆயுள் நிறுவனம்

ஆயுள் காப்புறுதிச் சந்தையின் அளவை விரிவுபடுத்தும் தொடர் முயற்சிகளில் ஒன்றாக நாட்டில் ஆயுள் காப்புறுதித் துறையில் தலைமைதாங்கும் செலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனம் இரண்டாவது தடவையாகவும் ஆயுள் வாரத்தை அறிவித்துள்ளது. இம்மாதம் 11 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதிவரை இந்த ஆயுள் காப்புறுதி வாரம் இடம்பெற்றது. இது குறித்து கம்பனியின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆர்.ரெங்கநாதன் கலந்




துரையாடுகையில்,

**கேள்வி.செலிங்கோ ஆயுள் நிறுவனம் ஏன் இரண்டாவது தடவையாகவும் ஆயுள் காப்புறுதிவாரத்தை அறிமுகம் செய்கின்றது?**

பதில்: முதல் தடவையாக நடத்தப்பட்ட ஆயுள் காப்புறுதிவாரத்தின்போது எமக்குக் கிடைத்த சாதகமான பதில்கள் எம்மைப் பெரிதும் ஈர்த்துள்ளன. இரண்டாவது தடவையாகவும் இதை ஏற்பாடு செய்ய இதுவே காரணம். ஆயுள் காப்புறுதி மூலம் பாதுகாப்புப் பெறுவதில் உள்ள முதலாவது படி அதன் தேவையையும், முக்கியத்துவத்தையும் புரிந்துகொள்வதாகும். இவ்வாறான ஆயுள் காப்புறுதிவாரம் ஒன்றை ஏற்பாடு செய்வது அது குறித்துப் பொதுமக்களை அறிவூட்டுவதற்கும் அது தொடர்பாகப் பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் சிறந்ததோர் வழிமுறையாகும். நாட்டின் ஆயுள் காப்புறுதி முன்னோடி என்றவகையில் எமது சந்தையை விஸ்தரிப்பதிலும், மேலும் பல உயிர்களுக்கு எமது பாதுகாப்பை வழங்குவதிலும் நாம் முன்னிலை வகிக்கவேண்டியது எமது கடமையாகும்.

**கே:இலங்கையில் ஆயுள் காப்புறுதியின் ஊடுருவல் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன?**

ப: எமது ஆய்வுகளின்படி ஆயுள் காப்புறுதியின் முக்கியத்துவம் குறித்து மக்கள் மத்தியில் போதிய அறிவின்மை இதற்கு முக்கிய காரண மாகும். சிலர் ஆயுள் காப்புறுதியை இன்னமும் மரணத்தோடு தொடர்புபடுத்துகின்றனர். ஆனால் எமது செய்தி அதுவல்ல. ஆயுள் காப்புறுதி என்பது உயிருடன் இருப் பவர்களுக்காகும். ஆயுள் காப்புறுதி செய்யும் ஒருவரில் தங்கி இருப்பவர்களும், அவரின் அன்புக்குரியவர்களும் உயிருடன் இருக்கும்பொழுதுதான் இந்த நன்மைகளைப் பெறுகின்றனர். இதன் கருத்து நிச்சயமற்ற ஒரு எதிர்கால நிலைமையின் போது குடும்பத்தலைவரில் தங்கியிருப்பவர்களும் அவரது குடும்பமும் பாதுகாக்கப்படுகிறது என்பதாகும். முன்னணி நபர்களின் சுறுசுறுப்பான பங்களிப்பு தற்போதைய காலகட்டத்தில் ஆயுள் காப்புறுதியின் அளவை அதிகரிக்கவும், அது குறித்து விழிப்பை ஏற்படுத்தவும் மக்கள் மத்தியில் அது ஆழ ஊடுருவவும் அவசியமாகின்றது.

ஆயுள் காப்புறுதி ஊடுருவல் குறைந்திருப்பதற்கு இன்னொருகாரணம் பணவீக்கத்தின் விளைவாக மக்களின் வருமானத்தில் ஏற்பட்டுள்ள தாக்கமாகும். இதற்குத் தீர்வாகச் சகல பிரிவினரும் நன்மைகளை அனுபவிக்கக்கூடிய வகையில் எல்லோராலும் செலுத்தத்தக்கதான ஆயுள் காப்புறுதி முறைகளை நாம் அறிமுகம் செய்துள்ளோம்.

**கே:இவ்வாண்டில் ஆயுள் காப்புறுதி வாரம் உள்ளடக்கியுள்ள விடயங்கள் எவை?**

ப:இவ்வாண்டில் ஆயுள் காப்புறுதி வாரம் இரண்டுகட்டங்களைக் கொண்டுள்ளது. ஆயுள் காப்புறுதி வாரத்திற்கு முந்திய செயற்பாடுகள் மற்றும் பிந்திய செயற்பாடுகள் என இரு கட்டங்களாகும். ஆயுள் காப்புறுதி வாரத்தை உருவாக்குவதற்கான ஊடகப் பிரசாரம் உண்மைக் கதைகளைக் கொண்டிருக்கும். வாழ்க்கையின் நிச்சயமற்ற நிகழ்வுகளுக்கு எதிராக ஆயுள் காப்புறுதியின் பாதுகாப்பை உணர்த்தும் வகையில் இதி அமைந்திருக்கும்.

ஆயுள் காப்புறுதி வாரம் ஆரம்பமாவதற்கு முன் எமது விற்பனைப் பிரதிநிதிகள் தத்தமது பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்கு விஜயம் செய்து விஷேடமாக ஏற்பாடு செய்யப்படும் கூட்டங்களின் மூலம் ஆசிரிய, ஆசிரியைகளுக்கும், பெற்றோர்களுக்கும் ஆயுள் காப்புறுதியின் முக்கியத்துவம் குறித்து அறிவூட்டுவர். அதனோடு இணைந்ததாகச் செலிங்கோ ஆயுள் காப்புறுதிக் கிளைகள் பொதுமக்களுக்கு அதேதொனிப்பொருளில் அறிவூட்டுவர்.

ஆயுள் காப்புறுதி வாரத்தின்போது கம்பனி 26 நகரங்களில் பொதுமக்கள் விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளை நடத்தும். துண்டுப்பிரசுரங்கள், ஸ்டிக்கர்கள், விவரக் கொத்துக்கள், வெளிப்பார்வைக்கான பதாதைகள், சுவரொட்டிகள் என்பவற்றின் துணையோடு இந்தப் பிரசாரம் முன்னெடுத்துச் செல்லப்படும். எமது விற்பனை விற்பன்னர்களைக் கொண்ட நடமாடும் குழு ''என்னிடம் ஆயுள் காப்புறுதி கேளுங்கள்'' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பெட்சுகளை அணிந்திருப்பர். ஆயுள் காப்புறுதியில் ஆர்வம் உள்ளவர்களின் தேவைகள் குறித்து மதிப்பீடு செய்வதே இவர்களின் முக்கியப்பணியாக இருக்கும். இந்தக் காலப்பகுதியில் ஆயுள் காப்புறுதி பெற்றுக்கொள்ளும் சகலருக்கும் அதன் அவசியம் குறித்து விளக்கமளிக்கும் விஷேட கையேடுகள் வழங்கப்படும். செலிங்கோ ஆயுள் தலைமையகத்தில் ஆயுள் காப்புறுதி தொடர்பாக விளக்கமளிக்கும் விஷேட கருமபீடம் ஒன்றும் ஏற்படுத்தப்படும்.

**கே:ஆயுள் காப்புறுதியின் தேவை குறித்த விழிப்பூட்டல் அதிகரிப்பதற்கு உங்கள் கம்பனி எடுத்துள்ள ஏனைய நடவடிக்கைகள் எவை?**

ப: ''ஆயுள், அன்பு, பாதுகாப்பு'' என்ற தொனிப்பொருளில் கடந்தாண்டு பிரபல கிரிக்கட் வீரர்களான முத்தையா முரளிதரன், சமிந்தவாஸ் ஆகியோரின் துணையோடு ஊடகப்பிரசாரங்களை நாம் மேற்கொண்டிருந்தோம். செலிங்கோ ஆயுள் குடும்பசவாரித் திட்டத்தையும் நாம் மேற்கொண்டோம். இந்தத் திட்டத்தின் மூலம் இவ்வாண்டு 400 குடும்பங்களைச் சேர்ந்த 2400 பேரை லெஷர்வேர்ள்ட்டுக்கு ஒருநாள் பயணம் அழைத்துச் செல்லவும் மேலும் 5 குடும்பங்களைச் சேர்ந்த 20 பேரைச் சகல செலவுகளுடனும் கூடிய சிங்கப்பூரில் ஆடம்பரக்கப்பல் பயணத்திற்கு அழைத்துச் செல்லவும் ,திட்டமிட்டுள்ளோம். இவை எல்லாமே ஆயுள் காப்புறுதிச் சந்தையின் அளவை விஸ்தரிப்பதை நோக்கமாகக் கொண்டவை.

**கே: கடந்த ஆண்டின் ஆயுள் காப்புறுதி வார வெற்றியை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்?**

ப: இது அளப்பரிய விளைவுகளைத் தந்தது. ஏழுநாள் காலப்பகுதியில் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமானவர்களுடன் இது நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது. 2008 பெப்ரவரியில் புதிய ஆயுள் காப்புறுதிகளின் விற்பனை அதற்கு முந்திய ஆண்டில் இதேகாலப் பகுதியை விட 40 வீதமாக அதிகரித்தது. இது நிச்சயம் ஆயுள் காப்புறுதி வாரத்தின் தாக்கத்தை வெளிப்படுத்துவதாகும்.*****

# ஈழத்துக்கென நீண்ட இலக்கணப் பாரம்பரியம் இருந்தது அதன் கடைசிக் கொழுந்தாகத் திகழ்கிறார் பண்டிதர் நாகலிங்கம்

## தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சிவலிங்கராஜா கருத்து

மருதனார்மடம்,பெப்.19

ஈழத்துக்கென நீண்ட இலக்கணப் பாரம்பரியம் ஒன்று உண்டு. இந்த மரபில் கடைசிக் கொழுந்தாகத் திகழ்பவர் பண்டிதர் க.நாகலிங்கம்.

பண்டிதர் க.நாகலிங்கத்தின் செந்தமிழ் இலக்கண விளக்கம் நான்காம் பாகம் (மெய்ப்பாட்டியலும் மரபியலும்) நூல் வெளியீடு கடந்த ஞாயிற்றுக்கிழமை அளவெட்டி மகாஜன சபை மண்டபத்திலே இடம்பெற்றது. இவ் விழாவிற் கலந்துகொண்டு தலைமையுரையாற்றும் போதே யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

ஈழத்துக்கென நீண்ட இலக்கணப் பாரம்பரியம் ஒன்று உள்ளது. நாமறிந்த வரையில் ஈழத்து இலக்கண மரபு கூழங்கைத் தம்பிரானுடனேயே தொடங்குகின்றது. இவரது நன்னூற் காண்டிகையுரை கிடைக்காத நூலாகக் கருதப்பட்டது. ஆனால் அண்மையில் ஜேர்மனியிலுள்ள ஹைடல் பேர்க் பல்கலைக்கழகத்திலிருந்து அது கண்டெடுக்கப்பட்டு டாக்டர் தாமோதரன் என்பவரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது சிறப் பம்சமாகும்.

இதனைத் தொடர்ந்து நாவலர், முருகேச பண்டிதர், சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர், புலோலி வ.குமாரசாமிப் புலவர், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், வித்துவ சிரோன்மணி கணேசையர் என அறாத் தொடர்ச்சியான இலக்கணப் பாரம்பரியம் ஒன்று இங்கு வளர்ந்து வந்துள்ளது. தொல்காப்பியக்கடல் எனப் போற்றப்பட்ட கணேசையரின் தமிழ் கூறு நல்லுலகால் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. இப்போதும் கணேசையரின் தொல்காப்பிய உரை தமிழகத்தில் மீள் பதிப்புச் செய்யப்படுவது அதன் சிறப்பைக் காட்டுகிறது.

இந்த மரபில் வந்த ஈழத்து இலக்கண மரபின் கடைசிக் கொழுந்தாக விளங்குபவர் பண்டிதர் க.நாகலிங்கம். நான்கு பாகங்களாக அமைந்த இவரது செந்தமிழ் இலக்கண விளக்கம் நூலின் இந்த நான்காவது பாகம் மரபியல், மெய்ப்பாட்டியல் என்பன பற்றிக் கூறுகின்றது - என்றார்.

### பண்பாட்டம்சங்கள் நினைவூட்டப்பட வேண்டியவை

இந்த விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கூறியவை வருமாறு:

இன்று தமிழர்கள் தமது பண்பாட்டம்சங்களை மறந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். தனது பண்பாட்டம்சங்களை மறந்த எந்த சமூகமும் வாழ்ந்ததாக வரலாறு இல்லை. மறந்து போய் இருப்பனவற்றை நினைவூட்டவும் அறியாமல் இருப்பனவற்றை அறிவூட்டவும் வேண்டிய தேவை இருக்கின்றது. அத்தகைய தேவையைத்தான் பண்டிதரின் இலக்கண நூல்கள் நிறைவு செய்கின்றன. மனவெழுச்சிகளை எவ்வாறு கையாள்வது என்பது பற்றி இன்று மேலைத்தேய மரபுகளைக் கற்றுவந்து பயிற்சிப்பட்டறை வைக்கின்றோம். ஆனால் அத்தகைய மரபுகள் தமிழரிடம் இருந்தன என்பதைத் தொல்காப்பியரின் மெய்பாட்டியல் காட்டுகின்றது என்றார்.

நூலின் வெளியீட்டுரையைப் பலாலி ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் கவிஞர் சோ.பத்மநாதனும் ஆய்வுரைகளைத் தமிழ்த்துறை விரிவுரையாளர்கள் இ.குமரன், பொ.அருந்தாகரன் ஆகியோரும் வழங்கினர். இவ் விழாவிலே ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு, சைவப்புலவர் சு.செல்லத்துரை, செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர்.

(202-55)

# நடனசங்கமம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.19

றோட்டறிக் கழகத்தால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருந்த ''நடன சங்கமம் - 2009'' நிகழ்வு தவிர்க்க முடியாத சமகாலச் சூழ்நிலை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது. நிகழ்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-9)



அளவெட்டி மகாஜன மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பண்டிதர் க.நாகலிங்கத்தின் 'செந்தமிழ் இலக்கண விளக்கம்' நூல் வெளியீட்டு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கவிஞர் சோ.பத்மநாதன், விகடகவி மு.திருநாவுக்கரசு ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதல் நான்கு படங்களிலும் காணலாம்.

முதல் பிரதியைத் துணைவேந்தரிடமிருந்து தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் பெற்றுக் கொள்வதையும் நூலாசிரியர் நடுவில் நிற்பதையும் இறுதிப் படத்தில் காணலாம். (படங்கள்:தமிழ்வண்ணன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரிழந்த படையினரின் விவரங்களை வெளியிட முடியாது என்கின்றது அரசு

கொழும்பு,பெப்.19

யுத்தத்தின்போது உயிரிழந்த முப்படை யினர் மற்றும் பொலிஸார் ஆகியோரின் விவரங்களைப் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியிட முடியாது என்று அரசு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறியது.

ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. எட்வேர்ட் குணசேகர நாடாளுமன்ற ஒழுங் குப் பத்திரத்தில் உள்ளடக்கியிருந்த கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அரசின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தனவே இதைக் கூறினார்.

2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற அவசரகாலச்சட்ட நீடிப்பு பிரேரணையின்போது சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கு அமைய குறித்த கால எல்லையில் ஒவ்வொரு திகதியிலும் உயிரிழந்த முப்படையினர் மற்றும் பொலிஸார் ஆகியோரின் எண்ணிக்கை அவர்கள் சேவை செய்த நிலைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக எட்வேட் குணசேகர நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் கேள்வியெழுப்பியிருந்தார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தக் கேள்விகளுக்கு எவருக்கும் பதிலளிக்க முடியாது என்று அரசின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன கூறினார்.

இதேவேளை, இக்கேள்விகளைக் கேட்டிருந்த எட்வேட் குணசேகர நேற்றுமுன்தினம் சபைக்கு வந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## உதவிக் கொடுப்பனவுக்கு மேலதிக நிதி

கோப்பாய்,பெப்.19

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணத்திற்கு விண்ணப்பித்தோருக்கென வட மாகாண சமூக நலத்துறைத் திணைக்களம் மேலதிகமாக 20ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்நிதி காத்திருப்போர் பட்டியலில் இருந்த 128 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. (202-72)

## நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட நிறுவனங்களின் பதிவுகள்

நல்லூர்,பெப்.19

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தனியார் கல்வி நிறுவனங்கள், நலன்புரிச் சங்கங்கள் என்பன தமது வியாபாரப் பதிவுகளை நல்லூர் பிரதேச செயலகத்திலேயே முதலில் பதிவுசெய்யவேண்டும் என பிரதேச சபைச் செயலர் எம்.சாந்தசீலன் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட அமைப்புகள் பதிவுக்கெனப் பிரதேச சபைக்கு வருகின்றன. பதிவுகளை நல்லூர் பிரதேச செயலகத்திலேயே மேற்கொள்ள வேண்டும் எனவும் பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார். (202-111)

# பரிசில் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தினரால் கடந்த வருடம் நடத்தப்பட்ட 'தேடல்' பரீட்சையில் தோற்றிப் பரிசில் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.றோட்டறி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பரிசில் பெற்றோர் விவரம் வருமாறு:

செ.சனோ (சாவகச்சேரி இந்துக் கல்லூரி, தரம்-10), ச.துவாரகன் (யாழ்.இந்துக் கல்லூரி, தரம் -13), பே.நிரோஷன் (யாழ். இந்துக் கல்லூரி, தரம் - 09), பே.து வாரகன் (கொக்குவில் இந்துக் கல்லூரி, தரம்- 07), ம.ஸ்ரீசாய்ஜனனி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி, தரம் - 13).

கு.சஜீவா (திருக்குடும்ப கன்னியர்மடம், தரம் - 08), ச.பெனிக்ஷன் (புனித பத்திரிசியார் கல்லூரி, தரம் -08), ப.துவாரகன் (கனகரத்தினம் மகாவித்தியாலயம், தரம் -08), ப.அம்பிகை (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, தரம் - 11), சி.துவாரகன் (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், தரம் -10), பா.மஹீந்தின் (யாழ்.இந்துக் கல்லூரி), பே.ஷங்கீர்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), த.ருஷாந்தினி (கனகரத்தினம் மகாவித்தியாலயம்), க.கஜசுமனி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சு.சிந்திஜா (வைத்தீஸ்வராக் கல்லூரி). (202-9)

## நூல் வெளியீட்டு விழா

மருதனார்மடம்,பெப்.19

வே.தனபாலசிங்கம் எழுதிய 'சிந்தனைக் களஞ்சியம்' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மல்லாகம் மகாவித்தியாலய அதிபர் மா.நாகேந்திரசீலனின் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில் முதன்மை விருந்தினராக ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் கலந்துகொள்வார்.

நூல் வெளியீட்டுரையை ஆசிரியர் ம.பா. மகாலிங்கசிவம் நிகழ்த்துவார். முதற்பிரதியைத் தெல்லிப்பழைக் கோட்டக்கல்விப பணிப்பாளர் ச.கைலைநாதனிடமிருந்து அண்ணா தொழிலகத்தின் அதிபர் பொ.நடராசா பெற்றுக்கொள்வார்.

நூலின் நயப்புரையை வைத்திய கலாநிதி க.இளங்கோ ஞானியாரும், கருத்துரையை கோப்பாய் சிவமும் வழங்குவர். (202-55)

# சிவாஜிலிங்கம் எம்.பிக்கு கொழும்பில் உயிராபத்து!

## மதுரையில் அவரே தகவல்

சென்னை,பெப்.19

"நான் தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு தற்போது சென்றால் என்னை சிறையில் தள்ளிக் கொன்று விடுவார்கள். எனது உயிருக்கு உத்தரவாதம் இல்லை" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் மதுரையில் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

இலங்கை வன்னிப் பகுதியில் தமிழர்கள் மீது இராணுவம் தொடர்ந்து தாக்கி வருகிறது. இதனால் தமிழர்கள் சாவின் விளிம்பில் உள்ளனர்.

தொப்புள் கொடி உறவான தமிழக மக்கள் அரசியல், சாதி, மதத்தைக் கடந்து நடத்தும் போராட்டம் தமிழ் ஈழ மக்களுக்கு மன வலிமையை ஏற்படுத்தி உள்ளது.

இந்தியா இந்தப் பிரச்சினையில் மனச்சாட்சிப்படி நடந்துகொள்ள வேண்டும்.

ஐ.நா. நேரில் தலையிடவேண்டும்

இலங்கைத் தமிழர்களுக்காக தாய் தமிழக மக்கள் போராடி வருகின்றமை ஆறுதல் அளிப்பதாக உள்ளது. தமிழக அரசும், மத்திய அரசும் தலையிட்டு போர் நிறுத்தத்திற்கு வழிகாணவேண்டும்.

அமெரிக்காவின் வெள்ளை மாளிகை முன்பு தமிழர்கள் பாதுகாப்பு அமைப்பு சார்பில் போராட்டம் நடத்தப்பட உள்ளது. ஐக்கிய நாடுகள் சபை நேரில் தலையிட்டு தமிழ் ஈழ மக்களின் விருப்பத்தை அறிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

இலங்கையில் ஏற்கனவே 3 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த நிலையில் நான் நாடு திரும்பினால் தேசத்துரோக குற்றம் சாட்டி சிறையில் தள்ளி கொன்றுவிடுவார்கள். எனது உயிருக்கு உத்தரவாதம் இல்லை. இதனால் இந்தியா வந்தேன். இதனால் இங்கு இருந்துகொண்டு தமிழ் மக்களுக்காகப் போராடுகிறேன். - இவ்வாறு அவர் கூறினார். (அ-சி)

## பேடன் பவலின் நினைவு தின விழா

பேடல் பவல் தின விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியில் யாழ்.மாவட்ட சாரண ஆணையாளர் ஜீ.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகவும், வடமாகாண சாரண ஆணையாளர் த.நா.போஜன், சென்.ஜோன்ஸ் க்ல்லூரி அதிபர் என்.கே. ஞானப்பொன்ராசா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

யாழ்.மாவட்ட, வலயப் பாடசாலைகளின் சாரணத் தலைவர்களையும், குருளைச் சாரணர்களையும், சாரண மாணவர்களையும் அன்றையதினம் பிற்பகல் 2.30 மணியளவில் சென்.ஜோன்ஸ், கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு மாவட்ட ஆணையாளர் கேட்டுள்ளார். (9)

# கல்லூரியின் கல்வித் தர்மமே மாணவர்களை சாதனை வீரர்களாக உருவாக்குகின்றது

## பருத்தித்துறை ஹாட்லிக்கு சிரேஷ்ட விரிவுரையாளர் பாராட்டு

மந்திகை,பெப்.19

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி கல்வித் தர்மத்தை அதிசிறப்பாக வழங்கி வருகின்றது. இக்கல்வித் தர்மம் மாணவர்களின் தலைகாத்து அவர்களைச் சாதனை வீரர்களாக உருவாக்கி வருகின்றது. இக்கல்லூரியின் தனித்துவத்தைப் பேணி தொடர்ந்தும் சிறந்த மாணவர்களை உருவாக்க கல்விச் சமூகம் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழக கணித புள்ளிவிவரத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராஜா.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகளிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு தொடர்ந்து அவர் கூறியவை வருமாறு:

மாணவர்கள் கல்வியில் மாத்திரமன்றி விளையாட்டுத்துறையிலும் சாதனை நிகழ்த்தவேண்டும். அப்போதுதான் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்ந்து இலட்சியத்தை அடையமுடியும். துணிவுடனும், அர்ப்பணிப்புடனும் செயற்படுபவர்கள் தாங்கள் விரும்பும் துறைகளில் சாதனை நிலை நாட்டிச் சாதனையாளர்களாகத் திகழ்வர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி புகழ்பூத்த கல்லூரி. இக்கல்லூரிக்குக் கல்வி உலகிலே உயர் மதிப்புண்டு. இக்கல்லூரியில் கல்வி கற்றவர்கள் பல்வேறு பகுதிகளிலும் அரிய சாதனைகளை நிலைநிறுத்தி வருகின்றனர்.

நான் கல்வி கற்ற காலத்தில் உங்களைப் போல் இவ்விளையாட்டு மைதானத்தில் மாணவனாக அமர்ந்திருந்தேன். இன்று பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகின்றேன். நீங்களும் எதிர்காலத்தில் இந்நிலைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். உங்களின் சிந்தனையும் எதிர்பார்க்கையுமே உங்களைச் சமூகத்தில் உயர்ந்தவர்களாக, சமூகச் செல்வாக்குடையவர்களாக உருவாக்கிச் சாதனைகளை நிலைநாட்ட வழிவகுக்கும்.

இன்றைய காலகட்டம் பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளைக் கொண்டது. இன்றைய சூழ்நிலையிலும் அதிபர், ஆசிரியர்கள் வழங்கும் அர்ப்பணிப்புமிக்க தூய்மையான சேவைகளை மாணவர்கள் முழுமையாகப் பெற்றுக்கொள்ளத் தவறிவிடக்கூடாது. ஒவ்வொரு மாணவனும் எதிர்கால இலட்சியத்தைத் தனது மனதில் இறுக்கமாக நிலைநிறுத்திக்கொள்ளவேண்டும். இக்கல்லூரியின் கல்வி அபிவிருத்திக்கும் பாடசாலை வளர்ச்சிக்கும் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் வழங்கிவரும் ஒத்துழைப்பு பாராட்டிற்குரியதாகும் - என்றார். (202-218)

## ஆதனவரி செலுத்தாத 19 பேர் மீது சட்ட நடவடிக்கை

நல்லூர்,பெப்.19

நல்லூர் பிரதேச சபை இதுவரை ஆதனவரி செலுத்தாத 19 பேர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

நீண்டநாள்களாக ஆதனவரி செலுத்தாதுள்ள குடியிருப்பாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் எம்.சாந்தசீலன் தெரிவித்தார்.

குடியிருப்பாளர்கள் தமக்கான ஆதனவரியைத் தாமதமின்றிச் சபையில் செலுத்துவதன் மூலம் சட்ட நடவடிக்கைகளில் இருந்து தம்மைப் பாதுகாப்பதுடன் வரிப் பணத்துக்கு மேலாகத் தண்டப்பணம் செலுத்தும் நிலையையும் தவிர்த்துக்கொள்ள முடியும் என்றும் குறிப்பிட்டார். (202-111)



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய ஆரம்பப் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

மாணவர்களின் அணிநடையை முதலாவது படத்திலும், மாணவிகள் பலூன் உடைத்தல் போட்டியில் பங்குபற்றுவதை இரண்டாவது படத்திலும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற தபாலதிபர் எஸ்.சண்முகரட்ணம் மாணவர் ஒருவருக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதை இறுதிப் படத்திலும் காணலாம். (250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் - 05 மாணவர்களுக்கான
# தயார்படுத்தல் பரீட்சைத் தொடர் – 2009
**வினாத்தாள் - 11** **நேரம் : 75 நிமிடங்கள்**

01. வட்ட நிலா வானத்திலே
சுற்றி வருகுது - நன்றாய்
சுற்றி வருகுது - அதைச்
சுற்றிச் சுற்றி விண்மீன்கள்
கொட்ட மடிக்குது - நன்றாய்க்
கொட்ட மடிக்குது

பட்டுப் போன்ற மேனியுடன்
பவனி வருகுது - நன்றாய்
பவனி வருகுது - அதைத்
தொட்டுப் பார்க்க எந்தன் மனம்
துடி துடிக்குது - மனமோ
துடி துடிக்குது.

1) இப்பாடலுக்குப் பொருத்தமான தலைப்பு என்ன?
..................................................
2) இங்குள்ள இடப் பெயர்ச்சொல் எது?
..................................................
3) வட்ட நிலாவைச் சுற்றி கொட்ட மடிப்பவை எவை?
..................................................
4) இங்குள்ள உவமைத் தொடர் எது?
..................................................
5) பவனி வருகுது என்பதன் கருத்து என்ன?
..................................................
6) நிலவு என்பதற்கு சமமான 2 சொற்கள் தருக.
..................................................
7) சந்திரன் முழுமையாக வானில் தெரியும் நாளை எவ்வாறு அழைப்பர்?
..................................................
8) வானம் என்பதன் எதிர்க்கருத்து என்ன?
..................................................
9) இங்குள்ள பெயர் அடைமொழிச்சொல் யாது?
..................................................

02. பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.
1) சிம்தானா கடைக்குச் சென்று பால் முட்டை சீனி மா பருப்பு என்பன வாங்கினாள்
..................................................
2) எமது நாட்டின் தலைவர் யார்

03. பின்வரும் மரபுத் தொடரின் கருத்தை எழுதுக.
1) கண் மலர்தல் -
..................................................
2) உள்ளம் கசிதல் -
..................................................

04. இடைவெளியில் வரவேண்டிய சரியான விடையின் கீழ்க்கோடிடுக.
1) நான் நன்றாகப் படித்து .................................... சென்றேன்.
( பல்களைக்கலகம், பல்கலைக்களகம், பல்கலைக்கழகம்)
2) எனக்கு ....................................தாங்க முடியவில்லை.
( தழைவலி, தலைவளி, தலைவலி)

05. பின்வரும் கருத்தைப் புலப்படுத்தும் பழமொழியை எழுதுக.
1) யாருமற்ற மனிதனை இறைவன் காப்பாற்றுவான்.
..................................................
2) அளவுக்கு மீறிய ஆசை துன்பத்தைத் தரும்.
..................................................

06. பின்வருவன சரியாயின் சரி எனவும், பிழையாயின் பிழை எனவும் அடைப்புக்குள் எழுதுக.
1) தேசப் படத்தில் புகையிரத நிலையத்தைக் காட்ட கறுப்பு நிறம் உதவும். ( )
2) இலங்கைக்கு தெற்கே இந்தியா உள்ளது. ( )
3) உலகில் அதிகமான மக்கள் ஆங்கில மொழியை பேசுகிறார்கள். ( )
4) அரசாங்கத் தகவல்களைப் பெற நாம் 1919 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவேண்டும். ( )
5) சுடர்ஒளி தினசரிப் பத்திரிகையாகும். ( )

07. சரியான விடையின் கீழ்க்கோடிடுக.
01) இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
1) கரப்பந்து. 2) வலைப்பந்து. 3) கூடைப்பந்து.

02) காற்றின் மூலம் மகரந்த சேர்க்கை நடைபெறும் தாவரம் அல்லாதது,
1) தென்னை. 2) கமுகு. 3) நெல். 4) வலிசுனேரியா.

03) சூரியனுக்கு மிக அண்மையில் உள்ள கிரகம்,
1) பூமி. 2) சந்திரன். 3) புதன். 4) வெள்ளி.

04) மஞ்சள் நிறத்தையும், நீல நிறத்தையும் கலந்து பெறப்படும் நிறம்,
1) ஊதா. 2) பச்சை. 3) கறுப்பு. 4) கபிலம்.

05) பறி - திரை என்பன தொடர்பான தொழில்,
1) விவசாயம். 2) மீனவத் தொழில்.
3) கொல்லன் தொழில். 4) இரத்தினக்கல் அகழ்தல் தொழில்.

06) சந்தேகத்துக்கிடமான பொதிகள் பற்றி அறியத்தர வேண்டிய தொலைபேசி இலக்கம்,
1) 118 2) 1919 3) 191 4) 112

07) பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடையை வழங்குவது,
1) கல்வி உயர்கல்வி அமைச்சு 2) கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.
3) பாடசாலை அபிவிருத்தி சங்கம். 4) ஜனாதிபதி செயலகம்.

08) மரக்கறிகளை வெட்டும்போது கவனிக்க வேண்டிய விடயம்,
1) அவித்த பின் வெட்டுதல். 2) கழுவிய பின் வெட்டுதல்.
3) வெட்டியவுடன் கழுவுதல். 4) அனைத்தும் சரி.

09) இலங்கையின் தேசிய கீதம் எத்தனை வரிகள் கொண்டது,
1) 24 2) 28 3) 29 4) 32

10) இலங்கையில் பெரும்பான்மையானோர் பின்பற்றும் சமயம் எது?
1) பௌத்தம். 2) இஸ்லாம். 3)இந்து. 4) கிறிஸ்தவம்.


08. மிகச் சரியான விடையினைத் தருக.
01) ஒரு மோட்டார் வண்டி புறப்படும்போது அதன் மானி வாசிப்பு

| 0 | 3 | 9 | 9 | 9 | 9 |
|---|---|---|---|---|---|

km களைக் காட்டியது. அம் மோட்டார் வண்டி இன்னும் ஒரு km சென்ற பின் அது காட்டும் வாசிப்பை எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|

km

02)



இதன் சுற்றளவு என்ன? ..................................

03) என்னிடம் 68 மாபிள் உண்டு. எனது தம்பியிடம் 24 மாபிள் உண்டு. இருவரிடமும் உள்ள மாபிள்களின் தொகை சமனாக நான் எத்தனை மாபிளை தம்பிக்கு கொடுக்க வேண்டும்? ..................................

04) ஷனாஸ் கடைக்குச்சென்று 48 இனிப்புக்களை வாங்கி வந்தாள். அதனை சறோஸ், சிம்தான், அப்கான், சிம்தா ஆகியோருக்கு சமமாகக் கொடுத்தாள் எனின், சிம்தா பெற்றது எத்தனை? ..................................


05) மர்கனாவிடம் 8, 4, 9 ஆகிய இலக்கங்களும், அப்னாவிடம் 3, 7, 2 ஆகிய இலக்கங்களும் உள்ளன. இவர்கள் இருவரும் உருவாக்கும் மிகப் பெரிய எண்களுக்கிடையிலான வித்தியாசம் என்ன? ..................................

06) இருபதாயிரத்து பன்னிரண்டு என்பதை இலக்கத்தில் எழுதுக.
..................................

07) ஒரு குளிர்பானப் போத்தல் 3 பேரை உபசரிக்கப்போதுமானது. 17 பேரை உபசரிக்க எத்தனை போத்தல் குளிர்பானம் தேவை?
..................................

08) 1/2 + 1/4 = ☐


09) இங்கு நிழற்றப்பட்டது முழு உருவின் என்ன பின்னம்?



..................................

10) 8639 என்பதில் இலக்கம் 6 உள்ள இடத்தின் பெறுமதி என்ன?
..................................

09. அட்டவணையை அவதானித்து விடை தருக.
* கிரிக்கெட் விளையாட்டில் வீசப்பட்ட ஓவர்களும் அதில் பெறப்பட்டுள்ள ஓட்டங்களும் தரப்படுகிறது.
1) மிகத் திறமையாக வீசப்பட்டது எத்தனையாவது ஓவர்?
..................................
2) மிக மோசமாக வீசப்பட்ட ஓவர் எது? ..................................
3) 5 ஓவரிலும் பெறப்பட்ட மொத்த ஓட்டம் எத்தனை?
..................................




4) 3 ஆவது ஓவரை விட 5 ஆவது ஓவரில் எத்தனை ஓட்டம் அதிகம் பெறப்பட்டது?
..................................
5) 1 ஆவது ஓவரை விட இரு மடங்கு ஓட்டம் பெறப்பட்ட ஓவர் எது?
..................................

**மாணவர்களே! கடுமையான தொடர் பரீட்சைகளுக்குப் பயிற்சிபெறத் தயாராகுங்கள்!!**
**"பயிற்சி உயர்ச்சி தரும்"**

**அன்பு மாணவர்களே!**
இப்பகுதியில் வெளியாகியுள்ள வினாத்தாள் - 1 இற்கான விடைக்குறிப்புகளுடன் வினாத்தாள் - 11 எதிர்வரும் வியாழக்கிழமை பிரசுரமாகும். இப்பகுதியில் தொடர்ச்சியாக வெளிவரும் வினாத்தாள்களை நேரங்கணித்துப் பயிற்சிசெய்து இவ் வருடம் நடைபெறவுள்ள அரச பரீட்சைக்கு இன்றே தயாராகுங்கள். உங்கள் விடைகளை ஆசிரியரின் விடைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்க மறவாதீர்கள்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

10. எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்துவோம் எனும் தலைப்பில் கருத்துள்ள 4 சொற்களுக்குக் குறையாத 6 வாக்கியங்களை திருத்தமான எழுவாய் பயனிலையோடு எழுதுக.

1) ..........................................................................................

2) ..........................................................................................

3) ..........................................................................................

4) ..........................................................................................

5) ..........................................................................................

6). ..........................................................................................

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 - 3 | 02 - 2 | 03 - 4 | 04 - 3 | 05 - 3 | 06 - 2 | 07 - 3 | 08 - 4 | 09 - 3 |
| 10 - 3 | 11 - 4 | 12 - 3 | 13 - 2 | 14 - 1 | 15 - 2,4 | 16 - 2,4 | 17 - 2 | 18 - 1.0 |
| 19 - 1 | 20 - 4 | 21 - 1 | 22 - 2 | 23 - 2 | 24 - 1 | 25 - 2 | 26 - 3 | 27 - 3 |
| 28 - 2 | 29 - 3 | 30 - 3 | 31 - 4 | 32 - 1 | 33 - 20 | 34 - 3 | 35 - 2 | |

36 - திகதி → திண்மை → மையத்து   37 - 3   38 - 3   39 - இ   40 - △

**ஆக்கம்:- திரு.யு.எல்.எம்.சாஜித்,**
கல்முனை/அல் மஷ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலை, நிந்தவூர்.

## இப்பரீட்சைத் தொடருக்கு வினாத்தாள்களை வழங்கும் ஆசிரியர்களின் விவரம்

★ திரு.சந்திரபவன் -கொழும்பு
★ திரு.மன்மதகாந்தன் -கொழும்பு
★ திரு.தயாளலிங்கம் -திருமலை
★ திரு.சாஜித்-நிந்தவூர்
★ திரு.பத்மநேசன் -திருமலை
★ திரு.அம்பிகைபாகன்-கொழும்பு
★ திரு.பிரதீப்குமார் -கொழும்பு
★ திரு.சுதர்சன்-கண்டி
★ திரு.சேனநாயக்கா -கொழும்பு
★ திரு.கபிலன்-வவுனியா
★ திரு.அன்பழகன்-யாழ்
★ திரு.தவகுலரெட்ணம்-கொழும்பு
★ திரு.தீபன்-வவுனியா
★ திரு.புன்னியாமீன்-கண்டி
★ திரு.சுரேஸ்குமார்-கம்பளை

## கடந்த 05.02.2009 இல் வெளிவந்த பகுதி -11 இற்கான விடைகள்

01 - சரி. 02 - சரி. 03 - பிழை. 04 -சரி.
05. சரி 06 - பூமி, பார், ஞாலம், வையகம், காசினி, குவலயம். 07 - எழுவீர்கள்/ விழமாட்டீர்கள்.

| | | |
|---|---|---|
| 08 - 3 | 09 - 2 | 10 - 4 |
| 11 - 1 | 12 - 3 | 13 - 2 |
| 14 - 3 | 15 - 2 | 16 - 2 |
| 17 - 2 | 18 - 1 | 19 - 4 |
| 20 - 4 | 21 - 3 | 22 - 4 |
| 23 - 3 | 24 - 4 | 25 - 1 |

26 - 29 வரை பொருத்தமான எழுத்துப் பிழைகளற்ற வாக்கியங்கள்.
30 - திறப்பு. 31 - குறடு. 32 - மின்குள் விளக்கு.
33 - துவிச்சக்கர[illegible]
36 - 10 37 - ரூபா 40.00 38 - 47
39 - ரூபா 940 40 - ரூபா 154.00 '41 - ,/ ?
42 - தேநீர் குடி(யுங்கள்) 43 - கதிரை. 44 - பனாவ.
45 - மீயா. 46 - கதவு. 47 - படம்.
48 - Baby. 49 - Crow. 50 - புத்தகம் வாசித்தல்/ குறிப்பெடுத்தல்.
51 - பணம் வைப்பிலிடல்/ சேமித்தல்/ பணம் எடுத்தல்/ கடன் பெறல்.
52 - முத்திரை/ தபாலட்டை வாங்குதல்/ ஓய்வூதியம் வழங்கல்/ கடிதம் தபாலிடல்/ காசுக்கட்டளை

**ஆக்கம்:-புன்னியாமீன் & மஸீதா புன்னியாமீன், கண்டி.**

### அன்பு மாணவர்களே!

இப்பகுதியில் உள்ள வினாக்கள் தொடர்பாக ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தெரிவித்தால், உரிய ஆசிரியர் மூலம் தெளிவுபடுத்தப்படும். 021-2229933 / 071-6850005 / 071-4273035



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கல்லூரியின் முன்னாள் ஆரம்பப்பிரிவு அதிபர் செ.துரைராஜா மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் விளையாட்டுப் போட்டியில் அப்பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்வினைப் படத்தில் காணலாம். *(படம்: நவாலிச் செய்தியாளர்)*



கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற இல்லமெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.கிழக்குப் பிரதேச சபைச் செயலர் த.நடராசா நிகழ்வை ஆரம்பித்து வைக்கின்றார்.



வடமராட்சி மாணிக்கவாசகர் வித்தியாலய கால்கோள் விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சிக் கல்வி வலயத் தமிழ்த்துறை உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி சுதாமதி நந்தபாலன் உரையாற்றுகிறார். அதிபர் எஸ்.இராகவனும், ஆசிரியைகளும் மேடையில் அமர்ந்திருக்கின்றனர். *(படம்: மந்திகைச் செய்தியாளர்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவிப்பு விழா

சுழிபுரம்,பெப்.19

யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் கடந்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தமது அங்கத்தவர்களின் பிள்ளைகளை கௌரவிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் சமாசப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

சமாசத் தலைவர் சு.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம், கன்னாதிட்டி மக்கள் வங்கி முகாமையாளர் என்.இராசதுரை ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (202-9-28)



யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் கால்கோள்விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

மாணவி ஒருவரின் நடன நிகழ்ச்சியையும் மாணவரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: குமார்)

## 3rd Year Rememberance



**Rev.**
**M.M.Inparuban**

Entered Glory on 19th Feb 2006

We will always remember you
With much love & gratitude
No words could ever say
How much we miss you.

*Fondly Remembered*
*By your*
*Wife and Daughters*

*129 Main Street,*
*Jaffna* *(82797)*

## திருமணப் பரிசாக தங்க நாணயங்கள்

நவாலி,பெப்.19

இலங்கை வங்கி மானிப்பாய் கிளையில் 18+ கணக்குப் பேணிய வாடிக்கையாளர் 10 பேருக்கு திருமணப் பரிசாக தங்க நாணயங்கள் வங்கி முகாமையாளர் இலட்சுமணசர்மாவினால் கடந்த வாரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

செல்வி நா.லோஜினி, செல்வி ஒ.மேரிலூசியா, செல்வி கே.சியாமளா, செல்வி எஸ்.சுகன்யா, செல்வி ரி.தேவதர்சினி, செல்வி ஆர்.பிறேமிளா, செல்வன் திரு.நிரூபன், செல்வி சி.சுலோஜனா, செல்வி ரி.கிருஷ்ணகுமாரி, செல்வி எஸ்.காயத்திரி ஆகியோரே தங்க நாணயங்களைப் பெற்றுக் கொண்டவர்கள்.

பதிவுத் திருமண திகதிக்கு முன்னான ஒரு வருட கால பகுதிக்குள் 18+ கணக்கில் ரூபா ஐம்பதினாயிரத்துக்கு குறையாத தொகையைப் பேணுவோர் அனைவருக்கும் இவ்விசேட பரிசு வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

(202-100)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



வேலணை, 2ஆம் வட்டாரம்,
செல்வநாயகம் வீதியைச் சேர்ந்த
அமரர்
**கந்தையா திருநாவுக்கரசு**

தோற்றம்: 14.03.1932
மறைவு: 19.01.2009

அன்பின் ஐயாவே!
ஆறுமக்கள் நாமிருந்தும்
அருகிலிருக்க முடியவில்லை
ஆறுதல் சொல்லித் தேற்ற
அம்மாவுமில்லை
பேரமக்கள் பார்வையில்
பெரிதும் உவந்தீரே!
ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாது நம் துயரம்.

*19.02.2009 வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

குடும்பத்தினர்
தி.கோணேஸ்வரன்.
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

(வி/556789)

## அனுமதிப் பத்திரமின்றி மாடுகள் ஏற்றிவந்த வாகனம் மடக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.19

அனுமதிப் பத்திரமின்றி ஐந்து மாடுகளை ஏற்றிவந்த சிறிய வாகனத்தினை சாவகச்சேரி பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

தென்மராட்சிப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஏற்றிச் செல்லும் வேளையில் பொலிஸார் மடக்கிப் பிடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மிருகங்களை வதைக்கும் வகையில் வாகனத்தில் கொண்டு வந்தமைக்காக வாகனத்தில் வந்த இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (202-207)

## முதலாம் ஆண்டுத் திவச அழைப்பு



தோற்றம் :
**05.04.1938**

மறைவு :
**03.03.2008**

திதி: அபரபக்ஷ ஏகாதசி

**அமரர் சண்முகம் தர்மதாசன்**

எமது குடும்பத் தலைவரின் ஓராண்டு நினைவு தினம் நாளை மாசித் திங்கள் 8 ஆம் திகதி (20.02.2009) வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றையதினம் இளவாலையில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மெய்கண்டான் வீதி,
இளவாலை.

மனைவியும்
சகோதரர்களும்.

## கேள்வி கோரல் - இலங்கை மின்சார சபை

| 1. பிராந்தியம்/ மாகாணம் | 2. கேள்வி இல, விவரமும் அளவையும் | 3. கேள்வி முடிவுத் திகதி, நேரம் | 4. கொள்வனவு குழு | 5. கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ளும் அலுவலகம், தொலைபேசி இல. | 6. கேள்விப் பத்திரத்தின் விலை | 7. கேள்விப் பத்திரம் ஒப்படைக்க வேண்டிய அலுவலகம் | 8. கேள்வி திறக்கும் இடம் | 9. தகவல் பிரதியின் விலை | 10. கேள்வியின் வகை ICB/NCB |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **மூலப் பொருள்கள்** | | | | | | | | | |
| பி.பொ.மு. (வ) | என்பி/டிஜிஎம்/ 2009/01 வழங்குநர்களைப் பதிவுசெய்தல் 2009 பொருள்கள் 1.சிமெந்திலான மின்கம்பங்கள் 2.மின் விநியோகத்துடன் தொடர்புடைய மின் பலப் பொருள்கள் (Electrical Materials) | 19.03.2009 2 pm | மாகாண கொள்வனவு குழு (வடக்கு) | பிரதி பொது முகாமையாளர் (வடக்கு) அலுவலகம் இலங்கை மின்சார சபை, 500 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். | 1,000.00 | பி.பொ.மு. (வ), அலுவலகம் 500 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். | பி.பொ.மு. (வ), அலுவலகம் 500 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் | - | NCB |
| **சேவைகள்** | | | | | | | | | |
| பி.பொ.மு. (வ) | என்பி/டிஜிஎம்/ 2009/01 வழங்குநர்களைப் பதிவுசெய்தல் 2009 சேவைகள் தாழ்நிலை (LT), உயர்நிலை (HT) மற்றும் உப நிலையம் (Substation) அமைக்கும் வேலைகள் | 19.03.2009 2 pm | மாகாண கொள்வனவு குழு (வடக்கு) | பிரதி பொது முகாமையாளர் (வடக்கு) அலுவலகம் இலங்கை மின்சார சபை 500 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். | 1,000.00 | பி.பொ.மு. (வ), அலுவலகம் 500 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். | பி.பொ.மு. (வ), அலுவலகம் 500 கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் | - | NCB |

இலங்கை மின்சார சபையின் கொள்வனவுக் குழுத் தலைவர் (வடமாகாணம்) தகுந்த வழங்குநர்களிடமிருந்து மேற்கூறப்பட்ட பொருள்கள் மற்றும் சேவைகளிற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார். ஒவ்வொரு பொருள் மற்றும் சேவைக்குரிய கேள்வி இலங்கை மின்சார சபையிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டகேள்விப் பத்திரங்களில் மாத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வி பத்திரங்கள் தகுந்த கேள்விதாரர் அல்லது அவரின் அனுமதி பெற்ற முகவருக்கே வழங்கப்படும். கேள்விப் பத்திரங்கள் உரிய கேள்விதாரர் அல்லது அவரின் அனுமதி பெற்ற முகவர் கொள்வனவு செய்யும்போது மேலுள்ள அட்டவணையில் 6 ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தொகையைச் செலுத்துவதுடன் எழுத்து மூலமாக வேண்டுகோளை பிரதி பொது முகாமையாளர் (வடக்கு) அவர்களிடம் வழங்கி கேள்விப் பத்திரத்தை 0900-1500 மணித்தியாலங்களுக்கிடையில் பெற்றுக்கொள்ள முடியும். கேள்விப் பத்திரங்கள் அவற்றிற்கான முடிவு நேரம் முடிந்தவுடன் கேள்விதாரர்களின் பிரசன்னத்தில் உடனடியாக நிரல் 8 இல் கூறப்பட்ட இடத்தில் திறக்கப்படும். தாமதமான கேள்விகள் பிரதிப் பொது முகாமையாளரினால் நிராகரிக்கப்படும். கேள்விகள் தொடர்பான விசாரணைகள் யாவும் கேள்வி முடிவுத் திகதியிலிருந்து 2 வார காலப் பகுதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளமுடியும்.

தலைவர்,
மாகாண கொள்வனவுக் குழு
(வடமாகாணம்)

'சூழல் அபிவிருத்தி வேலைகளிற்கு கை கொடுக்கும்'
இலங்கை மின்சார சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுபிள்ளைகளுக்கான சேமிப்புக் கணக்குகளுக்கு பரிசில் பொருள்கள்

யாழ்ப்பாணம்,பெப்.19

இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளையில் சிறுபிள்ளைகளுக்கான சேமிப்புக் கணக்கு ஆரம்பிப்பவர்களுக்குப் பரிசில் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

வைப்பிலிடும் தொகைக்கேற்ப பரிசில்கள் வழங்கப்படுவதாகக் கிளை முகாமையாளர் ச.சந்திரகுமாரன் தெரிவித்தார். (202-207)

## டிப்ளோமா கற்கைநெறி வகுப்புகள்

வேலணை,பெப்.19

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் இயந்திரவியல் டிப்ளோமா கற்கைநெறி பயிலவிருக்கும் மாணவர்களுக்கான ஆரம்ப விளக்க வகுப்புகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த மாணவர்களும், புதிதாக விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்களும் மேற்படி வகுப்புகளுக்குச் சமுகமளிக்கமுடியும் எனவும் பிராந்திய நிலைய கற்கைநெறி இணைப்பாளர் அறிவித்துள்ளார். (201-267)

## ஊர்காவற்றுறை சங்கத்தின் வாக்காளர் இடாப்பு மூடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,பெப்.19

ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கத்தின் வாக்காளர் இடாப்பு மூடப்பட்டுள்ளது. இந்த இடாப்புகள் அங்கத்தவர் ஆட்சேபனைகளைப் பெறுவதற்காக இன்றிலிருந்து அடுத்த மாதம் 5ஆம் திகதி வரை சங்கக் கிளைகளில் தொங்கவிடப்பட்டுள்ளன.

அங்கத்தவர்கள் ஆட்சேபனைகள் இருப்பின் அடுத்தமாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் தலைமை அலுவலகத்துக்கு தெரியப்படுத்துமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (202-9)

## இது தகுமா?



திறந்தவெளியில் உள்ள கிணறு. அக்கிணற்றுக்குள் வீதியால் செல்லும் [illegible] க னங்களின் தூசு படிகின்றது. கிணற்றைச் சுற்றிக் குப்பைகள்.

இந்நிலையில் அக்கிணற்றிலிருந்து மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்குக் குடி தண்ணீர் விநியோகிக்கவென பவுஸரில் நீர் நிரப்புகின்றது வல்வை [illegible] சபை.

இந்த விடயம் குறித்து 'உதயனில்' ஏற்கனவே சுட்டிக்காட்டப்ப[illegible] எனினும் நகர சபை இவ்விடயத்தைக் கவனத்தில் எடுக்காது தொடர்ந்து [illegible] களுக்கு இந்தக் கிணற்றிலிருந்து பெறப்படும் தண்ணீரையே விநியோகித்து வருவது கவலைக்குரியது என மக்கள் தெரிவிக்கின்றனர். (படம்: சுந்தா)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.19

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை யின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்குக் கல் லூரி அதிபர் திருமதி சி.கந்தசாமி தலைமை யில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் வி. பரந்தாமனும், சிறப்பு விருந்தினராகச் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாய பிள்ளையும் கலந்துகொள்வர். (201-59)

★ ★ ★

கைதடி - நாவற்குழி அ.த.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் வித்தியாலய மைதானத்தில் அதிபர் சி.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிக் கல்வி வலயக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் என்.சத்தியநாதன் பிரதம விருந்தினராகவும், கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தின் இணைப்பாளர் செல்வி மரியரட்ணம் பத்மசேகரி சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (202-9)

★ ★ ★

சுழிபுரம் கிழக்கு அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பாடசாலை அதிபர் திருமதி செ. செல்லையா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராகச் சங்கானைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் துரை எங்கரசு கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற கணக்காளர் க.கனக சபை கலந்துகொள்கின்றார். (50-119)

## வலி.கிழக்கில் மகளிருக்குப் பயிற்சி

கோப்பாய்,பெப்.19

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் மகளிருக்கான தொழிற்றிறன் சான்றிதழ் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

நீர்வேலி மாதர் அபிவிருத்திச் சங்கத்தில் நடைபெற்று வரும் இப்பயிற்சி நெறியில் 33 பயிலுநர்கள் கலந்துகொண்டு பயன்பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும். (202-72)

## புலோலி அம்பாள் ஆலயத்தில் திருட்டு

மந்திகை,பெப்.19

புலோலி வடக்கு அம்பாள் ஆலய களஞ்சியம், உண்டியல்களை உடைத்துத் திருடிய சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

புலோலி வடக்கு, கூழாவடி அம்பாள் ஆலய களஞ்சிய அறை உடைக்கப்பட்டு அங்கிருந்த தீபங்கள், பொருள்கள் என்பனவும் ஆலய உண்டியல் உடைக்கப்பட்டு உண்டியலிலிருந்த பணமும் திருடப்பட்டுள்ளன என ஆலய நிர்வாகிகள் பருத்தித்துறைப் பொலிஸில் முறையிட்டிருந்தனர்.

பருத்தித்துறைப் பொலிஸார் இந்த ஆலயத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகத்தின்பேரில் புலோலி தெற்கு, புலோலியைச் சேர்ந்த இராசரத்தினம் சண்முகராசா என்பவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்ததோடு அவரிடமிருந்து திருட்டுப் பொருள்களின் ஒரு பகுதியையும் மீட்டுள்ளனர்.

பொலிஸார் இச்சந்தேக நபரைப் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்தனர். நீதிபதி அவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (202-218)

## பொருள் விநியோகத்துக்குரிய சேவைக் கட்டணத்தை அதிகரித்துத் தரக் கோருகின்றது நெடுந்தீவு ப.நோ.கூ.ச.

யாழ்ப்பாணம்,பெப்.19

நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பொருள்கள் விநியோகத்திற்கான சேவைக் கட்டணத்தை அதிகரித்துத் தருமாறு யாழ்.செயலகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தச் சங்கம் யாழ்ப்பாணத்தில் இருந்தே பொருள்களை எடுத்துச் சென்று அங்குள்ள மக்களுக்கு விநியோகித்து வருகின்றது.

பொருள்களை இங்கிருந்து எடுத்துச் செல்லும்போது போக்குவரத்துச் செலவு மற்றும் படகில் கொண்டு செல்லும் கூலி போன்ற வற்றால் சங்கம் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகத்தில் சிரமப்பட்டு வருகின்றது.

செயலகத்தால் வழங்கப்படும் பொருள்களுக்குரிய சேவைக் கட்டணத்தையாவது அதிகரித்துத் தருமாறும் சம்பந்தப்பட்ட சங்கம் கோரியுள்ளதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (202-224)

## நல்ல பார்வை அவசியம்

மனிதர்கள், ஒவ்வொன்றையும் தீர விசாரிக்கும்போது, கடவுள் நம்மைத்தவிர வேறெங்கும் தனியே இல்லை. நன்மையும், தீமையும் நம் செயல்களினால்தானே தவிர, கடவுளுக்கும், இவற்றுக்கும் தொடர்பென்பதே இல்லை. நீ எதை விதைக்கி றாயோ, அதையே அறுவடை செய்கிறாய்.

நமக்குக் கிடைக்கும் நல்ல பலனோ, தீய பலனோ எதுவும் இறைவனுடைய செயல் அல்ல. அனைத்தும் நாம் செய்யும் காரியங்களின் விளைவுகளே! இந்த சத்யத்தைப் புரிந்துகொண்ட பிறகுதான் திவ்வியத்துவம் என்கிற ஆத்ம தத்துவத்தை அர்த்தம் செய்துகொள்ள முடியும்!

பண்டைக்காலத்திருந்தே மனிதர்கள் அநேக விதமான சாதனைகளைச் செய்து வருகிறார்கள். எத்தனையோ ஆன்மீக சாதனைகள் செய்தாலும், எத்தனையோ உபந்நியாசங்களைக் கேட்டாலும், எத்தனையோ ஆன்மீக நூல்களைப் படித்தாலும் நம் முடைய பார்வை சரியில்லையெனில் அனைத்தும் வியர்த்தமாகிப் போகிறது. அத னால்தான் புத்தர் முதன்முதலில் 'சம்யக் திருஷ்டி' எனக்கூறினார். நல்ல பார் வையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். ஒவ்வொரு மனித னும் நல்ல பார்வையை வளர்த்துக் கொள்ளுதல் அவசியம். இந்த திருஷ்டிதான் சிருஷ்டிக்குக் காரணம். திருஷ்டியும் சிருஷ்டியும் வேறல்ல. உனது பார்வை எப்படி யிருக்கிறதோ படைப்பும் அவ்வாறே அமைகிறது. புத்தர் தீர ஆலோசித்தார். இத் தனை காலம் என்னையே கேள்வி கேட்டுக்கொண்டு, ஆன்மீக சாதனைகளில் ஈடு பட்டுக் கடைசியில் நாம் சாதித்தது என்ன? எதுவுமே சாதிக்கவில்லை. எல்லாவற் றிற்கும் மனமே, தடையாக நிற்கிறது எனப் புரிந்துகொண் டார். சகலவிதமான சாதனைகளுக்கும் மனமே தடையாக இருக் கிறது என்பதையும் உணர்ந்துகொண்டார்.



மனதை முழுமையாக மறக்கும் மார்க்கத்தைக் கண்டறிய முற்பட்டார். பிறகே மனதை உள்ளடக்கி அமனஸ்கனாக மாறினார். அமனஸ்க நிலையை எட்டிய பின்னேதான்

சாயி சிந்தனை

## இதழியல் டிப்ளோமா கற்கைநெறி; தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,பெப்.19


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையம் இதழியல் டிப்ளோமா கற்கைநெறிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

'இதழியல் டிப்ளோமா' முழுநேரக் கற்கைநெறி ஒரு வருடம் கொண்டது.

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினம் இம்மாதம் 23ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை என்பனவற்றின் மூலம் தெரிவுகள் நடைபெறவுள்ளன. 28ஆம் திகதி சனிக்கிழமை எழுத்துப் பரீட்சை நடைபெறவுள்ளது. 50 பேர் முழுநேரப் பயிற்சிநெறிக்கு அனுமதிக்கப்படவுள்ளனர். (202-11)



கனடாவில் வசிக்கும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த க.கமலநாதன், க.யோகநாதன், ப.கெங்காதரன் என்பவர்களின் நிதியுதவியுடன் பெறப்பட்ட புதிய கணனியினை ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கனடா கந்தையா என்பவர் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலைக்கென வலிகாமம் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் முன்னிலையில் அதிபர் ந.சிவகடாட்சத்தி[illegible]

கணனி மென்பொருள் ஆக்கத்திற்காக மாகாண கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழினை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை மாணவிக்கு வலிகாமம் கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: நவாலிச் செய்தியாளர்)

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.19

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெறவிருந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் விவசாயக் கூட்டமும் எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கும், 11 மணிக்கும் நடைபெறுமெனப் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (201-100)

## கணித பாட மதிப்பீடு

மண்டுவில்,பெப்.19

தென்மராட்சிப் பாடசாலைகளில் தரம் 6, 9, 11 இல் கற்கும் மாணவர்களுக்கான கணித பாட மதிப்பீடு II நாளை வெள்ளிக்கிழமை சகல பாடசாலைகளிலும் நடைபெறும் என்று வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (202-59)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மக்கள் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்ட புதுக்குடியிருப்பு, மாத்தளன், அம்பலவன்பொக்கணை, இடைக்காடு ஆகிய பகுதிகள் மீது நேற்றுப் புதன்கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களின் உடல்களையும், காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதையும், குடியிருப்புக்கள் சேதமடைந்துள்ளமையையும் படங்களில் காணலாம்.

## ஈரவிழியில் ஈராண்டு ....



அமரர்
### ஐயம்பிள்ளை செல்லக்கிளி

அன்னையின் மடியில்: 13.07.1936
அம்பாள் திருவடியில்: 14.03.2007
திதி: அபரபக்க தசமி (19.02.2009)

வாசலிலே என்றும் காலோசை கேட்குதப்பா
கனவினிலே உங்கள் அன்பு மொழி கேட்குதப்பா
துணையாய் இருந்த போது துன்பம் மறந்தேனப்பா
இன்றோ - உருவம் பார்க்காமல் துடித்தே மாய்கிறேனப்பா.

(82823)

என்றும் உங்கள் பிரிவால் ஏங்கும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

கொக்குவில் சேச்லேன்,
கொக்குவில் மேற்கு.

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு பஞ்சலிங்கம்



அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு பஞ்சலிங்கம் கடந்த (14.02.2009) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் சின்னையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பவளமலர் (தேவி)யின் அன்புக் கணவரும் சாந்தினி, வசந்தி, ரகுநாதன் (ரகு சுவிஸ்), விஜயநாதன் (ரங்கன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரசேகரம், தேவாணந்தராசா, சுகந்தினி (சுவிஸ்), காந்திமதி ஆகியோரின் அன்பு மாமனும் அன்னலிங்கம், அமரர் பவளமலர், புஸ்பராணி, லீலாவதி, யோகராணி, பத்மராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர் அருள்மலர், செல்வரட்ணம், கமலாம்பிகை, வாலாம்பிகை, இராசரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் றொபிநாத், தனுஷா, தேனுஷா, அசோக், விஜய், ஆஷா, ராகுல், கோகுல் (சுவிஸ்), றம்மியா, யதுஷன், அபிநாஸ், ஆகாஸ், கஜந்தினி ஆகியோரின் அன்புப் பேரனும் மதுஸ்ரனின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2009) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப.11 மணியளவில் அளவெட்டி கொட்டுப்பனை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி. (82818)

## இன்று கூட்டம்

நல்லூர், பெப்.19

யாழ்.மாவட்ட விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தில் அமைந்துள்ள சீற்கோ கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ்.அரச அதிபர், யூ.என் டி.பி.நிறுவன அதிகாரிகள் கலந்து கொள்கிறார்கள் என யாழ்.மாவட்ட விவசாய பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்தார். (202-111)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் 'அன்ரி பயடிக்' தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், பெப்.19

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 'அன்ரிபயடிக்' மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் வெளிக்கடைகளில் பெற்றுக் கொள்ளுமாறு நோயாளர்களுக்கு அறிவுறுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்ட போது மருந்துகளுக்கு பற்றாக்குறை உள்ளது. பிரதேசத்தைச் சேர்ந்த பொது மக்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் மருந்து வகைகளை அன்பளிப்பாக வழங்குமாறு கோரியுள்ளனர். (202-207)

## பரீட்சை நிலைய மண்டபம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப்.19

இம்மாதம் 21ஆம், 22ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள அரச மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அதிசிறப்பு வகுப்புக்கு பதவி உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்த மண்டப இல 01, இல 02 ஆகியன யாழ்.மத்திய கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (201)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

திருமதி
### சிவமலர் சுந்தரபாரதி

(S.L.P.S-2-II., B.A.Dip. in Edu., M.Ed., Sc.Trd.)
(அதிபர், யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்)



எமது வித்தியாலயத்தில்
17.08.1988 முதல் ஆசிரியராக நியமனம் பெற்று
01.01.1992 முதல் உப அதிபராக உயர்வுபெற்று
01.04.2005 முதல் பதில் அதிபராகப் பதவி வகித்து
01.12.2008 முதல் இலங்கை அதிபர் சேவை 2-II இற்கு

பதவி உயர்வு பெற்றுள்ள எமது வித்தியாலய அதிபர் சகல செல்வங்களும் பெற்று மேன்மேலும் பல உயர்வுகள் பெற இன்றைய (19.02.2009) பிறந்ததின நந்நாளில் இறையருள் வேண்டி மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மூளாய்,
சுழிபுரம். (82820)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

Join with the #1 Course Provider



யாழ்ப்பாணம் மற்றும் எமது கிளை நிறுவனமாகிய நெல்லியடியிலும் 50% கட்டண சிறப்புச் சலுகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

Quality Education @ affordable Cost
Pay Only 50%

O/L பரீட்சைகளின் பின் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் முதன்மை தெரிவு ASIAN - CSC

Special Batches for O/Level School Leavers

DIRECT START 2009

MSO Microsoft Office Applications - 3 Months
DWD Diploma in Webpage Design - 3 Months
DCA Diploama in Computerized Accounting - 3 Months
ADDP Advanced Diploma in Digital Pre-press - 4 Months
CCA Certified Computer Accountant - 4 Months
DVP Diploma in Digital Video Production - 4 Months

Registered with Ministry of Tertiary & Vocational Education Commission

மேலதிக விபரங்களுக்கு...

ASIAN - CSC COMPUTER EDUCATION

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel 021 222 5677
கிளை
கொடிகாமம் வீதி, நெல்லியடி. Tel 077-3122198

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கப் பொருளாதாரத்தை நேர் சீராக்கும் முயற்சியில் ஒபாமா



சரிந்துவரும் அமெரிக்கப் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பி நிமிர்த்தும் தமது தீவிர எத்தனத்தின் ஒரு கட்டமாக, அமெரிக்க வீடமைப்புச் சந்தையை தூக்கி நிறுத்தும் தமது திட்டத்தை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நேற்று இடம் பெற்ற பொது நிகழ்வு ஒன்றில் வெளிப்படுத்தினார்.

அமெரிக்கப் பொருளாதாரத்தை நேர்சீராக்கும் முயற்சியாகத் தாம் வெளியிட்டிருக்கும் 78 ஆயிரத்து 700 கோடி டொலர் பெறுமதியான ஊக்க உதவியளிப்புத் திட்டம் தொடர்பான கட்டத்தில் ஒப்பமிட்ட பின்னர், இப்போது அதன் ஒரு பகுதியாக வீடமைப்புச் சந்தையை மேம்படுத்தும் விவகாரத்தில் தமது கவனத்தைத் திருப்பியிருக்கின்றார் ஜனாதிபதி ஒபாமா.

சுமார் ஐயாயிரம் கோடி டொலர் ஊக்க உதவியை வீடமைப்புச் சந்தைக்கு வழங்குவதன் மூலம் அமெரிக்கப் பிரஜைகள் தமக்குரிய வீடுகளை - தங்கள் வருமானத்துக்குள் மீளச் செலுத்தக்கூடிய அடகு கடன் முறையில் - பெறுவதற்கான முறைமை ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பளிப்பதே ஜனாதிபதி ஒபாமாவின் தற்போதைய திட்டத்தின் இலக்கு என்று கூறப்படுகின்றது.

அரியோனா மாநிலத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் வீடமைப்புச் சந்தையை ஊக்குவித்து, அதிலுள்ள தொய்வு நிலையை நீக்குவது பற்றிய தமது திட்டத்தை ஜனாதிபதி ஒபாமா வெளியிட்டார்.

அமெரிக்க பொருளாதாரத்தைச் சீர்செய்யும் தமது திட்டத்தின் ஒரு கட்டமாக சூரிய சக்தி, காற்றுச் சக்தி போன்ற மாற்று சக்தி மூலங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பான ஊக்குவிப்பு யோசனையை நேற்று முன்தினம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிரீஸ் நாட்டில் நில நடுக்கம்

ஏதேன்ஸ், பெப். 19

கிரீஸ் நாட்டின் வடமேற்கு பகுதியில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐனோனின் கடலிலுள்ள ஷாக்யன்தோஸ் தீவை மையமாகக் கொண்டிருந்த இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 5.4 புள்ளிகளாக பதிவாகி இருந்தது.

இந்த நிலநடுக்கத்தால் உயிர் சேதமோ, பொருள்சேதமோ ஏற்பட்டன என்பது குறித்து உடனடியாகத் தகவல் எதுவும் தெரியவில்லை.

## இந்தோனேஷியாவுக்கு ஹிலாரி விஜயம்

ஜகார்த்தா, பெப். 19

அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் நேற்று இரண்டாவது நாடாக இந்தோனேஷியாவுக்குச் சென்றார்.

அவர் அந்நாட்டு ஜனாதிபதி சுசிலோ பம்பங் யூடோயுனோவையும் சந்தித்துக் கலந்துரையாடினார். மற்றும் முக்கிய அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆத்திரமூட்டும் செயல்களில் வடகொரியா ஈடுபடுவதை நிறுத்துமாறு ஹிலாரி கிளின்ரன் மீண்டும் எச்சரித்துள்ளார்.

பரஸ்பர மரியாதையோடும், பரஸ்பர உரிமைகளோடும் முஸ்லிம் உலகை தாம் அணுக விரும்புகின்றார் என ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளதாகவும் அமைதியான ஜனநாயக நாடான இந்தோனேஷியாவுக்கு தனது விஜயம் மிகவும் முக்கியமானது என்றும் ஹிலாரி கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

புதிய அமெரிக்க நிர்வாகத்திற்கு இந்த நாடு சிறந்த சமிக்ஞை காட்டுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஹிலாரி கிளின்ரன் இன்று தென் கொரியாவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.





இந்தோனேஷியாவுக்கு விஜயம் மேற்கொண்ட ஹிலாரி கிளின்ரன் விமானத்திலிருந்து கையசைப்பதையும், அவரைச் சிறார்கள் வரவேற்பதையும் படங்களில் காணலாம்.

## ஆப்கானுக்கு 17 ஆயிரம் துருப்புகளை அனுப்ப அமெரிக்கா முடிவு

வாஷிங்ரன், பெப். 19

ஆப்கானிஸ்தான் தலிபான் இயக்கத்துடனான போரை விஸ்திரப்படுத்த மேலும் 17 ஆயிரம் துருப்புகளை அங்கு அனுப்ப அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அனுமதியளித்துள்ளார்.

அங்குள்ள அவசர நிலைமைகளைச் சமாளிப்பதற்காகவே இந்தத் துருப்புகளை அனுப்ப ஒபாமா முடிவெடுத்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கோடை காலத்தில் யுத்தம் மும்முரமடைவதால், அக்காலம் தொடங்குமுன் இந்தத் துருப்புகள் அங்கு அனுப்பி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பின்லேடன் ஒளிந்திருக்கும் இடத்தை கண்டுபிடித்து விட்டதாம் அமெரிக்கா

வாஷிங்ரன், பெப். 19

சர்வதேச தீவிரவாதி பின்லேடன், பாகிஸ்தானில் ஒளிந்து இருக்கும் இடம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தேடப்பட்டுவரும் தீவிரவாதிகளில், உலகத்திலேயே அதிக முக்கியமான நபரான பின்லேடன், கடந்த 8 ஆண்டுகளுக்கு மேலாக தலைமறைவாக இருந்து வருகிறார். அமெரிக்காவின் இரட்டைக் கோபுர தகர்ப்பு உட்பட பல்வேறு நாசவேலைகளில் தொடர்புடைய இவரை அமெரிக்கா உட்பட உலக நாடுகள் தீவிரமாகத் தேடி வருகின்றன.

இந்த நிலையில், அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியான ஆய்வுகளின் மூலம் பின்லேடன் ஒளிந்திருக்கும் இடம் பற்றிய தகவல் தெரிய வந்துள்ளது எனக் கூறப் படுகின்றது.



செயற்கைக்கோள்களின் உதவியுடன் நடைபெற்ற புவியியல் ஆய்வில், பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லையிலுள்ள பராசினார் நகரில் அவர் பதுங்கி இருக்கும் விவரம் தெரியவந்துள்ளது.

ஆப்கானிஸ்தான் எல்லையிலிருந்து பாகிஸ்தானுக்குள் 12 மைல் உட்புறமாக அமைந்திருக்கும் பராசினாரில், சுற்றுச்சுவருடன் கூடிய 3 கட்டடங்களில் ஒன்றில் பின்லேடன் மறைந்திருக்கலாம் என்று ஆய்வுக்குழுவின் தலைவர் தோமஸ் கில்லஸ்பி தெரிவித்திருக்கிறார். விமானங்களின் பார்வையிலிருந்து தப்புவதற்காக அவர் ஒளிந்திருக்கும் கட்டடம், மரங்களால் சூழப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பின்லேடன் தனிமையில் ஒளிந்து இருந்தாலும், அவருக்குப் பாதுகாப்பாக சில மெய்க்காப்பாளர்கள் இருப்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது. மின்சார வசதியுடன் கூடிய அந்த மறைவிடத்தில் பின்லேடனுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டு வரலாம் என்றும் தோமஸ் கில்லஸ்பி தெரிவித்திருக்கிறார்.

பின்லேடன் தொடர்பாகக் கிடைத்த பல்வேறு புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் இரவு நேரத்தில் எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் படங்கள் மற்றும் இதர தொழில்நுட்ப உதவியுடன் இந்த ஆய்வு நடைபெற்றுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ரயில் நிலையத்தில் முத்தமிடத் தடை பிரிட்டிஷ் அரசு அதிரடி அறிவிப்பு

லண்டன், பெப். 19

பிரிட்டனிலுள்ள ஒரு ரயில் நிலையத்தில் பயணிகளில் சிலரும் அவர்களை வழி அனுப்ப வருவோரும் நீண்ட நேரம் கட்டிப்பிடித்து முத்தம் கொடுப்பதால் கடும் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது. இதையடுத்து, ''இனிமேல் ரயில் நிலையங்களில் யாரும் முத்தமிடக்கூடாது'' என அதிரடி தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன், செஷைர் பகுதியில் உள்ளது வாரிங்ரன் பாக் குவா என்ற இடம். இங்கு ஒரு ரயில் நிலையம் உள்ளது. பிரிட்டனில் அதிக மக்கள் நெருக்கடியுள்ள இடங்களில் இந்த ரயில் நிலையமும் ஒன்று. அதிலும் லண்டன் - கிளாஸ்கோ இடையே அதிவேக புல்லட் ரயில்கள் விடப்பட்டதிலிருந்து இந்த ரயில் நிலையத்தில் ஏற்படும் நெருக்கடியை கேட்கவே வேண்டாம்.

பயணிகளும், அவர்களை வழி அனுப்ப வருவோரும் ரயில் புறப்படுவதற்கு முன்பாக பிரியாவிடை கொடுக்கும் வகையில் நீண்ட நேரம் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்துக்கொள்ளும் வழக்கம் இங்கு அதிகம் உள்ளது.

பயணிகள் அதிகமாகச் செல்லும் முக்கிய வழித்தடங்களில்தான் சத்தமின்றி இந்த முத்த கலாசாரம் அரங்கேறி வருகிறது. இதனால், ரயில்களில் ஏற வரும் ஏனைய பயணிகளுக்கு கடும் சிரமம் ஏற்படுகிறது. வழியை அடைத்துக்கொண்டு நீண்ட நேரம் கட்டிப்பிடித்துக்கொண்டு முத்தம் கொடுப்பதால், அவர்களுக்குப் பின் வரும் பயணிகள் தொடர்ந்து செல்லமுடியாமல் ஆங்காங்கே தேங்கி விடுகின்றனர். இதனால், கடைசி நேரத்தில் அடித்துப்பிடித்துக் கொண்டு வரும் பயணிகள் ரயிலில் ஏறமுடியாமல் போய்விடுகிறது. மேலும் இதனால் விபத்துகளும் அதிகரிக்கின்றன.

பிரிட்டன் ரயில் நிலையத்தில் தற்போதுதான் முதல் முறையாக முத்தமிடுவதற்குத் தடை விதிக்கப்பட்டு, விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. காதலர்கள், இளம் தம்பதிகள் முத்தமிட்டுக் கொள்வதற்கு வசதியாக ரயில் நிலையத்தில் வாகனத் தரிப்பிடப் பகுதிக்கு அருகில் தனியாக ஓர் இடம் ஒதுக்கித் தரப்பட்டுள்ளது. ரயில் நிலையத்தில் முத்தமிடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தாலும், தடையை மீறி 'ரொமான்ஸ்' செய்வோருக்கு அபராதம் எதுவும் விதிக்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உலக அரங்கில்

## காஸா பகுதியில் விமானத் தாக்குதல்

காஸா, பெப். 19

காஸாவின் தெற்குப்புறப் பகுதி மீது நேற்று இஸ்ரேலின் ஜெற் விமானங்கள் தொடர் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

எகிப்த்தில் இருந்து காஸாவுக்கு ஆயுதங்களையும், ஏனைய பொருள்களையும் கடத்தும் குகைவழியான பாதைகள் ஹமாஸ் இயக்கத்தின் பாதுகாப்பு அரண்கள் என்பன நேற்று புதன்கிழமை இஸ்ரேல் நடத்திய வான்தாக்குதலுக்கு இலக்கானது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலின் பின் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

அந்தயுத்த நிறுத்த காலப்பகுதியிலேயே இடையிடையே ரொகேட் தாக்குதல், விமான தாக்குதல் என்பன இடம்பெற்று வருகின்றன.

தனது கட்டுபாட்டில் உள்ள கரையோரப் பகுதிகளில் இஸ்ரேலின் முற்றுகையை விலக்க வேண்டும் என்று ஹமாஸ் இயக்கம் கேட்டுவருகின்றது.

2006ஆம் ஆண்டு ஹமாஸ் இயக்கத்தினால் பிடிக்கப்பட்ட இராணுவ வீரரை விடுவித்தாலே அந்த முற்றுகைகள் விலக்கப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஒரு நீடித்த போர் நிறுத்தம், காஸாவின் எல்லைக்கள் திறக்கப்படுதல், கைதிகள் பரிமாற்றம் என்பன உள்ளடங்கிய பேச்சுக்கு இருதரப்பையும் ஈடுபடுத்த எகிப்து ஈடுபட்டுவருகிறது.

# மும்பைத் தாக்குதல் சூத்திரதாரிகள் அறுவர் கைது எனக் கூறியபோதும் ஒருவரே நீதிமன்றில்!

## பாக். குளறுபடி செய்கிறது என இந்தியா கண்டனம்

இஸ்லாமாபாத், பெப். 19

மும்பைத் தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தானில் ஆறு தீவிரவாதிகள் கைதுசெய்யப் பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. எனினும், நேற்றுமுன்தினம் நீதிமன்றில் ஒருவர் மட்டுமே ஆஜர் செய்யப்பட்டார். தீவிரவாதிகளின் கைது தொடர்பில் பாகிஸ்தான் குளறுபடி செய்கிறது என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மும்பையில் கடந்த நவம்பர் மாதம் சுமார் மூன்று நாள்களுக்கு மேல் தீவிரவாதிகள் புகுந்து தொடர் தாக்குதல் நடத்தினர். அவர்கள் அனைவருமே பாகிஸ்தானில் உள்ள லஷ்கர்-இ- தொய்பா தீவிரவாதிகள் என்று தெரியவந்ததால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு இந்தியா வலியுறுத்தியது. அதைத் தொடர்ந்து சில தீவிரவாதிகளை பாகிஸ்தான் அரசு கைதுசெய்தது.

இதேவேளை, நீதிமன்றில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தில், பஞ்சாப் மாகாணத்தின் தென் [illegible] உள்ள [illegible] என்ற ஊர்தான் தீவிரவாதி [illegible] சொந்த ஊர் என்றும், அவரை ராவல்பிண்டியில் கைது செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால், உள்துறை அமைச்சர் மாலிக் பேட்டியளித்தபோது, கராச்சியில் கைது செய்ததாக தெரிவித்திருந்தார்.

பாகிஸ்தான் அரசின் தகவலின்படி, மும்பைத் தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டது தீவிரவாதி ஜாகித் அக்தர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், மும்பைத் தாக்குதல் [illegible] விசாரிப்பதற்காகவே தனி [illegible] ஒதுக்கி இருப்பதாக அடியாலா சிறை அதிகாரி முகமது பெரோஸ் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தம் ஏற்பட மத்திய அரசு தன்னாலான முயற்சிகளை எடுக்கும்

## ராமதாஸிடம் சோனியா உறுதி



புதுடில்லி, பெப்.19

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என சோனியா காந்தி உறுதியளித்தார் - என்று பா.ம.கவின் நிறுவுநர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட மத்திய அரசு மேலும் அழுத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சோனியாவிடம், டாக்டர் ராமதாஸ் நேற்றுமுன்தினம் நேரில் சந்தித்து வலியுறுத்தினார்.

இருவரும் 20 நிமிட நேரம் இலங்கைப் பிரச்சினை குறித்து பேச்சு நடத்தினர்.

இச்சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியபோட., அவர் இதைத் தெரிவித்தார் மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலஙகைத் தமிழர் பாதுகாப்பு பற்றி, சோனியா காந்தியிடம் எடுத்துக் கூறினேன். அவர் இந்த விடயத்தில் மிகவும் கவலை கொண்டிருக்கிறார்.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்று சோனியா காந்தி உறுதியளித்தார்.

சோனியா காந்தியின் அறிவுரைப்படி, வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியையும் சந்தித்துப் பேச இருக்கிறேன்.

போர் நிறுத்தம் ஏற்பட விடுதலைப் புலிகள் மட்டும் ஆயுதங்களைக் கீழே போட்டால் போதாது. இராணுவமும் போரை நிறுத்த வேண்டும். இதற்கு போர் நிறுத்தம் அறிவிக்கப் பட வேண்டும்.

இலங்கைப் பிரச்சினையில், இந்தியா முக்கிய இடம் வகிக்கிறது. எனவே மனிதாபிமான உணர்வுடன் மத்திய அரசு செயற்பட்டு, இந்த பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஐக்கிய நாட்டு சபை மூலமாகவும், போர் நிறுத்தம் ஏற்பட இந்தியா முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

# கனடா செல்ல முயன்ற 2 இலங்கையர் கைது!

சென்னை, பெப்.19

போலிக் கடவுச்சீட்டு மூலம் கடனா செல்ல முயன்ற இலங்கையர்கள் இருவர் நேற்றுமுன் தினம் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னையிலிருந்து கனடா செல்லும் ஜெட் ஏயர்வேஸ் விமானம், நேற்றுமுன்தினம் அதிகாலை 2.30 மணிக்கு புறப்படத் தயாரானது. பயணிகளை குடியுரிமை அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அப்போது, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கௌரிசங்கர் (வயது - 49), அவரது மனைவி கிரேஸி ஆகியோரின் கடவுச்சீட்டைப் பரிசோதித்தனர். கிரேஸியின் பெயரில் கொழும்பைச் சேர்ந்த நிஷாந்தினி (வயது - 26) என்ற பெண் பயணம் செய்ய முயன்றமை விசாரணையில் தெரிந்தது.

நிஷாந்தினி கடந்த ஓராண்டாக திருச்சியில் தங்கியுள்ளார். உறவினரான கௌரிசங்கர், நிஷாந்தினியை கனடா அழைத்துச் செல்வதாக கூறி, ரூபா ஒரு லட்சம் கேட்டுள்ளார். பின்னர், அம்பத்தூரில் வசிக்கும் தனது மனைவி கிரேஸியின் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி, நிஷாந்தினியை கனடாவுக்கு அழைத்துச் செல்ல திட்டமிட்டிருந்தமை தெரியவந்தது. இதனால், இருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

# ஈழத்தமிழர் படுகொலையைத் தடுக்கக்கோரி சென்னையில் விஜயகாந்த் நாளை பேரணி!

## ஒபாமாவுக்கான முறையீட்டு மனு அமெரிக்கத் தூதரகத்திடம்



சென்னை, பெப்.19

இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுக்கக் கோரி சென்னையில் விஜயகாந்த் தலைமையில் நாளை பேரணியாகச் சென்று அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம் மனுக் கொடுக்கப்படுகிறது.

இதுதொடர்பாக தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு

மதம், மொழி, இனம் ஆகிய வெறி களோடு அமைந்த சிங்கள அரசு, இலங்கையில் மண்ணின் மைந்தர்களாகிய தமிழர்களை முப்படை கொண்டு தினந்தோறும் கொன்று குவித்து வருகிறது.

உலக அமைதியைக் காப்பதற்காக உருவாக்கப்பட்டது ஐ.நா. மன்றம். உலக அமைதியை காப்பதில் அமெரிக்கா இன்று முதலிடம் வகிக்கிறது. அமெரிக்காவின் இன்றைய ஜனாதிபதியாக உள்ள ஒபாமா ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்குரலாக கருதப்படுகிறார்.

ஆகவே பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் சார்பாக, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் கவனத்தையும், உலக அமைதியை உருவாக்க கடமைப்பட்டுள்ள ஐ.நா மன்றத்தின் பொதுச் செயலாளர் பான்-கி-மூன் கவனத்தையும் ஈர்க்கும் வகையில் தே.மு.தி.க. கண்டனப்பேரணி நடத்த முடிவு செய்துள்ளது.

வரும் 20ஆம் திகதி (நாளை) காலை 10 மணியளவில் எனது தலைமையில் சென்னையில் கூடி அங்கிருந்து ஊர்வலமாக புறப்பட்டு, அமெரிக்க தூதரகத்திற்கு சென்று அங்குள்ள அதிகாரிகளிடம் தமிழினத்தின் சார்பாக நமது முறையீட்டு மனுவை அளித்து அதை ஒபாமாவுக்கும் அனுப்ப உள்ளோம்.

அதே போல, உலகெங்கும் உள்ள தமிழர்கள் இதே உணர்வுடன் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கும், ஐ.நா. பொதுசெயலர் பான்-கி-மூனுக்கும் இலங்கைத் தமிழர் படுகொலையை தடுக்க மின்னஞ்சல் மூலம் செய்தி அனுப்ப கேட்டுக் கொள்கிறேன்.

( ஒபாமாவின் மின்னஞ்சல் முகவரி -
http://www.whitehouse.gov/contact
ஐ.நா. பொதுசெயலர் பான்-கி-மூனின் மின்னஞ்சல் முகவரி - inquiries@un.crg)

இதில் தமிழுணர்வுள்ள அனைவரையும் பங்கேற்குமாறு வேண்டுகிறேன் - என்றுள்ளது.

# இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த உலக நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## தமிழர் நல உரிமைப் பேரவை இந்திய ஜனாதிபதியிடம் மனு



சென்னை, பெப்.19

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட சர்வதேச நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி, ஜனாதிபதி பிரதீபா பட்டீலிடம் இலங்கைத் தமிழர் நல உரிமை பேரவை அமைப்பின் சார்பில் நேற்றுமுன்தினம் மனு அளிக்கப்பட்டது. அந்த மனுவில் -

இலங்கையின் வடக்குப் பகுதியில் வசித்து வரும் 2 லட்சத்து 50 ஆயிரம் தமிழர்கள் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் வீடுகளை விட்டு வெளியேறி, காடுகளிலும், மேடுகளிலும் வசித்து வருகிறார்கள். அங்கு அப்பாவி மக்கள் மிகவும் கொடூரமான நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள். அங்கு போர் நிறுத்தம் ஏற்படவும், இலங்கைத் தமிழர்களின் மனித உரிமைகள் காக்கப்படவும், சர்வதேச சமுதாயம் உடனடியாகத் தலையிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் நடைபெற்று வரும் போரினால், இதுவரை 70 ஆயிரம் அப்பாவித் தமிழர்கள் உயிரிழந்துள்ளார்கள். அங்கு தமிழினமே அழிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழர்கள் மீது இலங்கை விமானங்கள் குண்டு வீசி அழிக்கவும் வாய்ப்பு உள்ளது. அங்கு மனித உரிமை மீறல் தொடர்ந்து நடந்து வருகிறது. தமிழ் மக்களுக்கு, உணவு, உடை, மருந்து போன்ற அத்தியாவசிய பொருள்கள் மறுக்கப்பட்டு வருகிறது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பிரச்சினை தீருவதற்கு, ஐ.நா. சபையே ஒரே நம்பிக்கை. இந்த சூழலில் இந்திய - இலங்கை அரசுகள், சர்வதேச நாடுகள், சர்வதேச அமைப்புகள் ஆகியோர் உடனே தலையிட்டு, அங்கு போர் நிறுத்தம் ஏற்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எங்கள் அமைப்பு கேட்டுக் கொள்கிறது. பல ஆண்டுகளாகப் போர் நிறுத்தம் ஏற்படாத நிலையில், ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்ஸில் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை கமிஷன் ஆகியோர் இந்தப் பிரச்சினையில் தலையிட வேண்டும்.

40 ஆண்டுகளாக இலங்கைத் தமிழர்களுக்கு மறுக்கப்பட்டு வரும் அடிப்படை உரிமைகளை மீட்டுத்தர உதவவேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது.

# ஈழத்தமிழருக்கு எதிரான போரை நடத்துவது சோனியாவே; சீமான் அனல் பறக்கப் பேச்சு

## தான் எவருக்கும் பயந்து ஓடி ஒளியவில்லை எனவும் குமுறல்



ஈழத்தில் தமிழர்கள் மீதான போரை நடத்துவது சோனியாவே தவிர சிங்கள அரசு அல்ல. நான் எவருக்கும் பயந்து எங்கும் ஓடி ஒழியவில்லை. சில ஊடகங்கள் தவறான செய்திகளை வெளியிடுகின்றன - என்று நெல்லையில் நேற்றுமுன்தினம் சீமான் கூறினார். இதுகுறித்த விவரம் வருமாறு -

திருநெல்வேலி பாளையங்கோட்டை சவகர் திடலில் நேற்று மாலை 7 மணியளவில் நெல்லை சட்டத்தரணிகள் சங்கம் சார்பில் ஈழத்தமிழர் ஆதரவுப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக இயக்குநர் சீமான் கலந்துகொண்டார்.

சில தமிழர் விரோத நாளிதழ்கள் சீமான் தலைமறைவாகிவிட்டார். அவரை புதுவை பொலிஸார் வலைவீசித் தேடி வருகின்றனர் என்று தவறான செய்திகளைப் பரப்பின. இத்தகைய காரணங்களால் நெல்லை மக்களின் மத்தியில் சீமான் இந்நிகழ்வுக்கு வருவாரா, வரமாட்டாரா என்ற பரப்பு ஏற்பட்டது. சரியாக 8 மணியளவில் சட்டத்தரணிகளின் பாதுகாப்புடன் சீமான் மேடைக்கு வந்தார். பின்னர் உரையாற்றிய சீமான் -

பொய்யான தகவல்களை பரப்பிவரும் ஊடகங்களையும், ராஜீவ் காந்தி மரணத்தின் பொழுது ஒரு காங்கிரஸார் கூட இறக்காததன் மர்மத்தினை பற்றியும், இத்தாலி நாட்டு சோனியா அன்னையாகும்பொழுது , கர்நாடக பார்ப்பன ஜெயலலிதா அம்மாவாகும் பொழுது எங்கள் இன வே.பிரபாகரன் எங்களுக்கு அண்ணன் ஆவதில் என்ன தவறு என்று உணர்ச்சி பொங்க உரையாற்றினார்.

ஈழத்தில் தமிழர்கள் மீதான போரை நடத்துவது சோனியாவே தவிர சிங்கள அரசு அல்ல என்று இந்தியாவின் மனிதாபிமானமற்ற செயல்களைப் பற்றியும் தெளிவுபட இரவு 10.30 மணி வரை சிறப்பாக உரையாற்றினார்.

# இலங்கையில் இருதரப்பும் போரை நிறுத்த மத்திய அரசு தீவிர முயற்சி எடுக்கவேண்டும்

## தமிழக அரசு வேண்டுகோள்; ஈழ அகதி முகாமுக்கு ரூ. 5 கோடி

சென்னை, பெப்.19

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இருசாராரும் போரை நிறுத்தி உடன்பாட்டுக்கு வருவதற்கு மத்திய அரசு தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டும் - என்று மத்திய அரசுக்கு தமிழக அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழக அரசின் 2009 - 2010ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை (பட்ஜெட்) சட்டசபையில் நிதி அமைச்சர் க.அன்பழகன் தாக்கல் செய்து பேசியபோதே இதனைக் கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர் நல்வாழ்விற்காகவும், அவர்கள் பெற வேண்டிய நல உரிமைகளுக்காகவும் தொடர்ந்து இந்த அரசு குரல் கொடுப்பதோடு, இலங்கையில் இன்று நடைபெற்று கொண்டிருக்கின்ற தமிழர்களுக்கு எதிரான போர் நிறுத்தப்பட்டு விரைவில் அமைதி காண்பதற்கு மற்ற நாடுகளோடு சேர்ந்து இந்திய அரசின் உறுதி மிக்க வலிமையான குரலும் இணைந்திட வேண்டும் என்ற தமிழக அரசின் எதிர்பார்ப்பை நிறைவு செய்து, ஜனாதிபதி உரையிலே இந்தக் கருத்தை வலியுறுத்தியுள்ள மத்திய அரசுக்கு நன்றியைத் தெரிவித்து கொள்கிறோம்.

இந்தக் கருத்தைச் செயற்படுத்திட இருசாராரும் போரை நிறுத்தி, நியாயமான உடன்பாட்டிற்கு வந்திட தேவையான தீவிர முயற்சிகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம். ஏற்கனவே மத்திய அரசுடன் இணைந்து இந்த அரசு தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக செயற்படுத்திவரும் திட்டங்களோடு, ஆளுநர் உரையில் அறிவித்தவாறு, அவர்கள் வசிக்கும் அகதிகள் முகாம்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த ரூ.5 கோடி இந்த வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது - என்றார்.

# ஈழத் தமிழர் பிரச்சினையில் கருணாநிதியின் நாடகத்தை மக்கள் நன்கு அறிவர் —வைகோ



திருச்சி, பெப். 19

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் முதல்வர் கருணாநிதியின் ஏமாற்று வேலை, நாடகத்தை மக்கள் அறிந்து கொள்வர் - என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போர் நிறுத்தம் கோரி, இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில், திருச்சியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மனிதச்சங்கிலிப் போராட்டத்தில் பங்கேற்ற அவர், அளித்த பேட்டியிலேயே இதைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கை அரசு இப்போது இனப் படுகொலையை நடத்தி வருகிறது. தமிழ் இனத்தை ஒட்டுமொத்தமாக அழிக்கும் பணியை மேற்கொண்டு வருகிறது. இதற்கு இந்தியா இராணுவ உதவி முதல் அனைத்து வகையான உதவிகளையும் செய்து வருகிறது. இந்திய அரசு இலங்கை அரசுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டும் முழு முயற்சியில் ஈடுபட்டுள்ளது. மத்திய அரசுக்கு தமிழர்கள் பற்றியும், இலங்கையில் நடைபெற்று வரும் தமிழினப் படுகொலையைப் பற்றியும் அக்கறையில்லை.

உலக நாடுகள் எல்லாம் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று கூறி வரும் நிலையில், போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று இது வரை ஒருவார்த்தைகூட இந்திய அரசு கூறவில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சினையால் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பை எப்படி தடுத்து நிறுத்துவது என்று ஒரு புறம் வேலை செய்து கொண்டே, இன்னொரு புறம் நாங்கள் மனிதச் சங்கிலி நடத்துகிறோம் என்று அறிக்கை விடுகிறார் கருணாநிதி. இவர்களின் ஏமாற்று நாடகத்தை மக்கள் அறிந்து கொள்வர். தீக்குளிப்பதும் ஒருவித தீவிரவாதம் என்று சட்டப்பேரவையில் பேசிய அமைச்சர் மு.க. ஸ்டாலின், மனிதச்சங்கிலி நடத்துவதாக இப்போது அறிவித்துள்ளார். இலங்கையில் தீக்குளித்து இறந்த 4 பேரில் ஒருவரது [illegible] சர் ஸ்டாலின் துக்கம் விசாரித்தாரா? - என்றார்.

# போரினால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழருக்கு தன் ஆதரவுண்டு என்கிறார் நடிகர் மம்முட்டி



போரினால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களுக்கு என் ஆதரவு உண்டு என்று மலையாளப் பட உலகின் சூப்பர்ஸ்டார் மம்முட்டி தெரிவித்துள்ளார்.

இவர் 'மௌனம் சம்மதம்', 'மறுமலர்ச்சி', 'மக்கள் ஆட்சி,' 'சீனியர் ஜுனியர்' ஆகிய தமிழ்ப் படங்களிலும் நடித்திருக்கிறார். சில வருட இடைவெளிக்குப்பின் அவர், 'அறுவடை' என்ற தமிழ்ப் படத்தில் நடிக்கிறார்.

படத்தின் இறுதிக்கட்டப் படப்பிடிப்பு சென்னை ரெட்ஹில்ஸ் பகுதியில் நேற்றுமுன் தினம் நடந்தது. படப்பிடிப்பு இடைவேளையில், செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தபோதே அவர் இதனைக் கூறினார்.


[illegible] களை நான் வேண்டாம் என்று சொல்வதில்லை. என்னை நடிக்க அழைத்தால், நிச்சயமாக நடிப்பேன். மலையாளத்தை விட தமிழ் தான் மிகத் தொன்மையான மொழி. தமிழில் இருந்து தான் மலையாளம் உருவானது. திராவிட மொழிகளுக்கு எல்லாம் தாய், தமிழ்தான்.

கே - இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழ் நடிகர்-நடிகைகள் எல்லோரும் குரல் கொடுக்கிறார்கள். மலையாள நடிகர்கள் இதுவரை கருத்துத் தெரிவிக்கவில்லை. இந்தப் பிரச்சினை பற்றி உங்கள் கருத்து என்ன?

ப - பாதிக்கப்பட்ட மக்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும், அவர்களுக்கு என் ஆதரவு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக மக்களின் உணர்வலைகளை வெளிப்படுத்திய மனிதச் சங்கிலிப் போராட்டம்



# வன்னியில் கொல்லப்பட்ட மக்களின் விவரத்தை வெளியிட முடியவில்லை என்று ஐ.நா. சபை கைவிரிப்பு!

## எண்ணிக்கையை உறுதிப்படுத்த முடியவில்லையாம்

கொழும்பு, பெப்.19

இலங்கையில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் காஸாவில் ஏற்பட்டதை விட அதிமானது என ஐக்கிய நாடுகள் சபை கணிப்பிட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும் அந்த விவரங்களை வெளியிட ஐ.நா.மறுத்துள்ளது.

அரசியல் காரணங்களுக்காகவே ஐக்கிய நாடுகள் இந்தப் புள்ளிவிவரங்களை வெளியிடத் தயங்குகின்றது எனத் தெரிவிக்கப்படுவதை செயலாளர் நாயகம் பான் கீ - மூனின் பேச்சாளர் மிச்செலே மொன்டாஸ் நிராகரித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு பான் கீ - மூனிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் இது குறித்து இன்னமும் தீர்மானிக்கவில்லை என்றும் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில் அவர் இந்தத் தகவல்களைக் கூறினார்.

''பான் கீ - மூனை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு தாம் அழைப்பு விடுத்துள்ளார் என இலங்கை ஜனாதிபதி தெரிவித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டமை குறித்து உங்களுக்குத் தெரியுமா? மேலும், அது முழு நாடடிற்கும் செல்வதற்கான அழைப்பா அல்லது ஒருசில பகுதிகளுக்கானதா?'' என்று செய்தியாளர்கள் கேட்டனர்.

''இலங்கையில் மீண்டும் மோதல் தீவிரமடைந்த பின்னர் இரு தரப்பாலும் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் குறித்து ஐக்கிய நாடுகளிடம் மதிப்பீடு உள்ளதா? சிலர் இது காஸாவை விட அதிகம் என்கின்றனர். எண்ணிக்கை என்ன?'' என்றும் ஐ.நா.செயலரின் பேச்சாளரிடம் கேட்கப்பட்டது.

### முழுமையான மதிப்பீடு எம்மிடமில்லை

அப்போது அவர்,''எங்களிடம் சரியான எண்ணிக்கையில்லை. ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த சிலரும் மோதலில் சிக்கியுள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியும். முழுமையான மதிப்பீடு எம்மிடமில்லை. உண்மையான எண்ணிக்கை என்னவென அறிவதற்கான வழிகளும் எங்களுக்கு இல்லை.

நாங்கள் அங்குள்ள மக்களைக் காப்பாற்றத் தான் முயல்கிறோம். தவிர அங்கு உடல்களை எண்ணும் நடவடிக்கையில் ஈடுபடவில்லை. உயிருடன் இருப்பவர்களைக் காப்பாற்ற முயல்கிறோம்'' - என்றார்.

''தற்போது நாங்கள் மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து பொது மக்களை வெளியேற அனுமதிக்குமாறு கோருகின்றோம். மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் இதனைச் செய்யுமாறும் நாங்கள் கேட்டு வருகின்றோம். சிலர் சுட்டுக்கொல்லப்பட்டமையை நாங்கள் கண்டித்துள்ளோம்.

பொதுமக்களின் பகுதிகள் குறித்தே எமது கவலையுள்ளது. இந்த மக்கள் அங்கிருந்து வெளியேற அனுமதிக்கப்பட வேண்டும்(அங்கு சிக்கியுள்ள எமது பணியா ளர்களும்) என்பதே எமது கவலை.

அங்குள்ள மக்களுக்கு உதவவே அவர்கள் அங்கு சென்றார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். வன்னியில் உள்ள மக்களுக்கு மருந்து மற்றும் உணவுப் பொருள்களை அவர்கள் கொண்டு சென்றார்கள்'' என்றும் அவர் கூறினார்.

கேள்வி:-கடந்தவார இறுதியில் விடுதலைப் புலிகளைக் குற்றம் சாட்டிப் பல அறிக்கைகள் வெளியாகியுள்ளன. புலிகள் சிறுவர்களைப் படையணிகளில் சேர்க்கிறார்கள் என 'யுனிசெவ்' தெரிவிக்கின்றது. விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றனர் என்று ஐக்கிய நாடுகள் தெரிவிக்கின்றது. இலங்கை அரசின் செயற்பாடுகள் பற்றி எந்த விமர்சனமும் இல்லை என சிலர் கூறுகின்றனரே?

பதில்:-அங்கிருந்து கிடைக்கும் தகவல்களை அடிப்படையாக வைத்தே இந்த அறிக்கைகள் வெளியாகியுள்ளன.

பலவகையான சூழ்நிலைகளைக் கண்ணால் பார்த்தவாறு உள்ள ஐக்கிய நாடுகளின் பணியாளர்கள் அளித்த தகவல்களின் அடிப்படையில் இவை அமைந்துள்ளன.

கேள்வி:- அப்படியென்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை குறித்து உங்களால் தெரிவிக்க முடியுமா?

எபதில்:-இல்லை. இதனை எங்களால் கணிப்பிட முடியவில்லை. உடல்களைக் கணக்கிடும் பணியாளர்கள் எமக்கு அங்கு இல்லை.

கேள்வி:- இலங்கையில் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் குறித்து ஐக்கிய நாடுகள் மதிப்பீடொன்றை மேற்கொண்டுள்ளது என்றும் ஆனால் அரசியல் காரணங்களுக்காக அதனை வெளியிடவில்லை என்றும் தகவல்கள் வருகின்றன.

காஸாவில் தொடர்ச்சியாக உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை வெளியிடப்பட்டது போல இங்கு ஏன் வெளியிடப்படுவதில்லை?

பதில்:- வித்தியாசமென்னவென்றால் காஸாவில் எமது பணியாளர்கள் 9 ஆயிரம் பேர் உள்ளனர். ஆனால் இலங்கையில் மிகக் குறைந்தளவு பணியாளர்களே இருக்கின்றனர்.

அரசியல் காரணங்களுக்காக நாங்கள் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை வெளியிடவில்லை என்பதை மறுக்கிறேன்.

எங்களால் இந்த எண்ணிக்கையை உறுதிப்படுத்த முடியாததாலேயே நாங்கள் வெளியிடவில்லை.

கே:- இந்தக் கேள்வியைக் கேட்டதற்கு மன்னிக்கவேண்டும். இலங்கை உயிரிழப்புகள் காஸாவை விட அதிகமா அல்லது குறைவானதா?

பதில்:- இதனை இந்தத் தருணத்தில் தெரிவிக்க முடியாது.

## இரு கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு மூன்று மாத விடுமுறைக்கு அனுமதி

கொழும்பு, பெப். 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சிவாஜிலிங்கம், கனகரட்னம் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. அலிக்கல் அலுவிகார ஆகியோர் மூன்று மாதங்களுக்கு நாடாளுமன்றிற்கு சமூகம் கொடுக்காதிருக்கும் வகையில் அவர்களுக்கு நேற்று நாடாளுமன்றத்தில் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் இருவருக்கும் நேற்று முதல் மூன்று மாத விடுமுறை வழங்கப் பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. அலிக்கல் அலுவிகாரவிற்கு மார்ச் மாதம் 5ஆம் திகதி முதல் மூன்று மாத விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

சிவாஜிலிங்கத்துக்கான விடுமுறையைக் கோரும் பிரேரணையை சொலமன் சிறில் எம்.பியும், கனகரட்னத்திற்கான விடு முறையைக் கோரும் பிரேரணையை துரைரட்ணசிங்கம் எம்.பியும், அலிக்கல் அலுவிகாரவிற்கான விடுமுறையைக் கோரும் பிரேரணையை ஜோஸப் மைக்கல் பெரேரா எம்.பியும் நேற்று சபையில் சமர்ப்பித்தனர்.

சபையோரின் இணக்கப்பாட்டோடு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டார மூவருக்கும் விடுமுறையை வழங்கினார். (சி)

# தீர்வுக்கான வாய்ப்புகளை தமிழருக்கு சிங்கள ஆட்சியாளர்கள் வழங்கவில்லை!

## சிக்கலுக்கு அதுவே காரணம் என ஒப்புக்கொள்கிறார் சந்திரிகா

கொழும்பு, பெப். 19

இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு தீர்வுக்கான வேறு வாய்ப்புகளை வழங்கவில்லை. இந்திய - இலங்கை உடன்படிக்கையில் காணப்படும் அம்சங்களை ஆட்சியாளர்கள் சிதைத்து வந்துள்ளனர் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க குற்றம்சாட்டியுள்ளார்.

மக்களுக்கு விடுதலைப் புலிகள் [illegible]வத்தை வழங்கியமையாலேயே அவர்கள் அந்த அமைப்பிற்கு ஆதரவு வழங்குகின்றனர் என்றும் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் இந்திய பஞ்சாயத்து இராஜ்ஜிய விவகார அமைச்சர் மணிசங்கர் ஐயரின் நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்ட வேளையிலேயே சந்திரிகா குமாரதுங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்குத் தீர்வு [illegible] அரசமைப்பின் 13ஆவது திருத்த[illegible] மானதாகவுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரங்களைப் பகிர்வது சில காலத்திற்கு முன்னர் இடம்பெற்றிருந்தால் இனப் பிரச்சினைக்கு எப்போதோ தீர்வு கண்டிருக்கலாம் என்றும், அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தான் முயன்றார் என்றும் அவர் அங்கு கூறினார்.

''எனினும் இலங்கையின் சில அரசியல் கட்சிகள் அதற்கு அனுமதிக்கவில்லை. அத்னை அமுல்படுத்தினால் சுதந்திரதமிழ்த் தேசத்திற்கு அது வழிவகுக்கும் என அவர்கள் எச்சரித்தனர்'' என்றும் குறிப் பிட்டுள்ளார்.

''அந்தத் தருணத்தில் அவர்கள் அதனைக் குழப்பியிருக்காவிட்டால் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்கலாம். எனினும் ஒவ்வொரு இலங்கை அரசுகளும் இந்திய - இலங்கை உடன்படிக்கை செயற்பட முடியாத நிலையை உருவாக்கியதால் அதனை நடைமுறைப் படுத்த முடியவில்லை என சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும் விடுதலைப்புலிகளுக்கு கொள்கை ரீதியாகவே தமிழ் மக்கள் ஆதரவளிக்கின்றனர் என்பதை அவர் நிராகரித்துள்ளார்.

75 வீதமான சிங்களவர்கள் விடுதலைப் புலிகளுக்கு தமிழ் மக்கள் ஆதரவளிக்கின்றனர் என்கின்றனர். இலங்கை ஆட்சியாளர்கள் எவ்வித வாய்ப்பையும் தமிழ் மக்களுக்கு வழங்காததால் தமிழ் மக்களுக்கு வேறு வழியிருக்கவில்லை - என அவர் தெரிவித்துள்ளார்.

''விடுதலைப் புலிகள் ஒரு வகையில் தமிழ் மக்களுக்கு கௌரவத்தை வழங்கியுள்ளனர். இதன் காரணமாக தமிழ் மக்கள் புலிகளுக்கு ஆதரவு வழங்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். தமிழ் மக்கள் தனிநாட்டிற்கோ அல்லது பயங்கரவாதத்திற்கோ ஆதரவு வழங்கவில்லை'' எனவும் சந்திரிகா குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவது குறித்து தான் ஆழ்ந்த கவலையடைந்துள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். தமிழ் மக்களுடன் பேச்சுகளை மேற்கொள்வதே நிரந்தரத் தீர்விற்கு வழி வகுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் இருப்போரைப் பற்றியே எந்நேரமும் என் மகன் பேசுவான்

## தீக்குளித்த தமிழ்வேந்தனின் தாயார் கதறல்

கடலூர், பெப்.19

எம் மகனுக்கு எந்நேரமும் ஈழத்தில் இருக்கின்றவர்களைப் பற்றித்தான் பேச்சு. அவனுக்கு எல்லாமே திருமாவளவனும், இலங்கையில் இருக்கின்ற பிரபாகரனும் தான். அவர்கள் இரண்டு பேர் மீதும் பைத்தியமாக இருப்பான்.

- ஈழத்தமிழருக்காகத் தீக்குளித்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தமிழ்வேந்தனின் தாயார் அஞ்சலைதேவி பத்திரிகையாளர்களிடம் கதறியபடி கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

எம் மகனுக்கு எந்நேரமும் ஈழத்தில் இருக்கின்ற சனங்களைப் பற்றித்தான் பேச்சு. நேற்றைக்கு மனிதச்சங்கிலிப் போராட்டத்துக்கு போய் வந்தவன், இரவு முழுவதும் புலம்பிக்கிட்டிருந்தான். ஈழத்து மக்கள் ஆயிரமாயிரமாக செத்துக்கொண்டிருக்கிறார்கள். என்னால் ஒன்றும் பண்ண முடியவில்லையே எனப் புலம்பினான்.

இன்றைக்கு (நேற்றைக்கு) காலையில் என் பிள்ளை இப்படிப் பண்ணிவிட்டான் என்று சொன்னார்கள். அவனுக்கு எல்லாமே திருமாவளவனும், இலங்கையில் இருக்கின்ற பிரபாகரனும்தான். அவர்கள் இரண்டு பேர் மீதும் பைத்தியமாக இருப்பான் -என்றவாறு கதறினார்.

(அ)

# சிக்குண்ட பொதுமக்களை வெளியேற அனுமதிக்கக் கோருகிறது அமெரிக்கா

வாஷிங்டன், பெப்.19

இராணுவ நடவடிக்கைகளின் போது, பொதுமக்கள் பாதிக்கப்படாமல் அவர்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு இலங்கை அரசாங்கத்திடம் அமெரிக்கா கேட்டிருப்பதாக ராஜாங்க அமைச்சின் பேச்சாளர் கோர்டன் டக்கிற் நேற்றுத் தெரிவித்தார்.

போர்ப் பிரதேசத்திற்குள் சிக்குண்ட மக்கள் பிறர் எவரும் சென்று பார்க்க முடியாத, தொடர்பு கொள்ள முடியாத நிலை குறித்து அமெரிக்கா கவலை கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

சிக்குண்ட மக்கள் வெளியே செல்வதற்கு அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் அனுமதிக்க வேண்டும் என்றும் - அவர் கேட்டுள்ளார்.

(அ-1)

## அரச கட்டுப்பாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் இருந்து தெற்கு நோக்கி வந்தனவாகவே தெரிந்தன.

புதுமாத்தளன் வைத்தியசாலை அதிகாரியும், சுகாதார வைதிய அதிகாரியுமான டாக்டர் துரைராஜா வரதராஜா மேற்கண்ட தகவல்களை ஏ.பி. செய்தி நிறுவனத்துக்கு தெரிவித்துள்ளார்.

அந்நிறுவனத்துக்கு அவர் மேலும் தெரி வித்திருப்பவை வருமாறு:-

அரசாங்கம் பிரகடனம் செய்துள்ள மக்கள் பாதுகாப்பு வலயப்பகுதி நோக்கி நேற்று அதிகாலை ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் நித்திரையில் இருந்த ஒரே குடும்ப உறவுகள் 13 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மொத்தம் 38 சடலங்கள் வைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட்டன.

ஷெல்கள் யாவும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வந்து பொதுமக்கள் பகுதிகளில் வீழ்ந்தன. பின்னர் இரு தடவைகள் விமானத் தாக்குதல்கள் அந்தப் பகுதியில் நடத்தப்பட்டன. அந்தத் தாக்குதலில் 25 பொதுமக்கள் கொல்லப்பட்டுள் ளனர். அவர்களின் சடலங்களும் வைத்திய சாலைக்கு எடுத்துவரப்பட்டன. இந்தத் தாக்குதலில் மொத்தம் 80 பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என நேரில் கண்ட மக்கள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் மருத்துவ சிகிச்சை இன்றி மரணமாகியுள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சைக்காக வேறு வைத்தியசாலைகளுக்கு அப்புறப்படுத்தப்பட வேண்டும் - என்றார்.

பாடசாலை ஒன்றில் தற்காலிகமாக உருவாக்கப்பட்ட வசதிகள் குறைந்த வைத்தியசாலையிலேயே டாக்டர் வரதராஜா தன்னால் இயன்றவரை மக்களை காப்பாற்றப் பாடுபடுகின்றார் - என்று ஏ.பி. செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-1)

## புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

மக்கள் பாதுகாப்பு வலயம் மீது படையினர் தாக்குதல் எதுவும் நடத்தவில்லை.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவி மூலம் கப்பலில் உணவுப்பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இடம் பெயர்ந்து வருகின்ற மக்களுக்கு படையினர் உதவிபுரிகின்றனர் - என்றார்.

## பொதுமக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டதாகக் கூறப்படுவதை நான் மறுக்கிறேன்.

விடுதலைப் புலிகளின் நிலைகள் மீதே படையினர் தாக்குதல் நடத்துகின்றனர். சில இலக்குகளை படையினர் தெரிவு செய்துள்ளனர். அவை எல்லாம் விடுதலைப் புலிகளின் இலக்குகளாகும்.

பொதுமக்களுக்கு எதிராக எந்தத் தாக்குதல் நடவடிக்கையையும் அரசு முன்னெடுக்கவில்லை. பொது மக்கள் தாக்கப்பட்டதாக வெளிவரும் தகவல்கள் புனையப்பட்ட தகவல்களே - என்றார் அவர்.

(அ-1)

## பிரணாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றஞ்சாட்டினார். முல்லைத்தீவிலிருந்து வெளியேறும் தமிழர்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்துகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழர்களின் நலன் கருதி, புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டு, சண்டை நடைபெறும் பகுதிகளிலிருந்து அப்பாவித் தமிழர்களை விடுவிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார். வடக்கு, கிழக்கு மாகாண புனரமைப்புக்கு இந்தியா உதவும் என்றும் அவர் கூறினார்.

பிரணாப் முகர்ஜியின் இந்தக் கருத்துக்கு ம.தி.மு.க., பா.ம.க. உள்ளிட்ட தமிழக எம்.பிக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இலங்கைப் பிரச்சினை தொடர்பாக விவாதம் நடத்த வேண்டுமென்று அவர்கள் வலியுறுத்தினார்கள். ஆனால் சபாநாயகர் அதற்கு அனுமதி மறுத்தார். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அமளியால் சபையில் கூச்சல் - குழப்பம் நிலவியது. இதையடுத்து சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி சபையை அரை மணிநேரத்திற்கு ஒத்திவைத்தார்.

மீண்டும் அவை கூடியதும் பா.ம.க., ம.தி.மு.க. எம்.பிக்கள் பிரணாப் முகர்ஜி விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்தை திரும்பப்பெறவேண்டும் என்று வலியுறுத்தினார்கள். அவர்கள் இது தொடர்பாகக் கோஷமிட்டுக்கொண்டே சபாநாயகரின் இருக்கை எதிரே அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். இதையடுத்து இரண்டாவது முறையாகவும் மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

(அ-சி)

(02ஆம் பக்கமும் பார்க்க)

## யுத்த நிறுத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் வைத்தே அரசின் இந்த நிலைப்பாட்டை அறிவித்தார் ரம்புக்வெல.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை அரசு பயங்கரவாதத்தை முற் றாக ஒழிப்பதில் உறுதியாக இருக்கிறது. புலிகளை அழிப்பதற்கான அரசின் செயற்றிட்டம் முடிவடையும் தறுவாயில் இருக்கிறது. புலிகள் அங்கு மக்களை வெளியேற விடாமல் தடுத்து வைத்துள்ளனர். அதனால்தான் புலிகளை அழிப்பதற்கான இராணுவ நடவடிக்கை மெதுவாக மேற்கொள்ளப்படுகிறது. இல்லாவிட்டால் எப்போதே புலிகளின் கதை முடிந்திருக்கும்.

வன்னியில் புலிகள் நூறுக்கும் குறைவான சதுர கிலோமீற்றர் பிரதேசத்துக்குள் முடக்கப்பட்டுவிட்டனர். இந்த நிலையில் புலிகளுக்கு உயிர்மூச்சுக் கொடுப்பதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் முயற்சிக்கின்றனர். அதற்காகவே இருதரப்பும் யுத்தநிறுத்தம் செய்ய வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர். தமிழ்க் கூட்டமைப்பினரின் இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ள முடியாதது; கேலிக்கிடமானது. இதனை அரசு ஒருபோதுமே ஏற்காது. புலிகளை அழிப்பதற்கான போரை அரசு தொடர்ந்தும் முன்னெடுக்கும் - என்றார்.

(சி)

## 10மணி நேர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய கொடூரங்கள் குறித்து இணையத் தளங்கள் வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

முல்லையில் மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் நேற்று புதன்கிழமை அதிகாலைவேளை நடத்தப்பட்ட கொத்துக் குண்டுத் தாக்குதல்களில் 108 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 223 பேர் காயமடைந்துள்ளனர். பின்னர் நண்பகல் 12.30 மணியளவில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் 21 பேர் கொல்லப்பட்டனர். 71 பேர் படுகாயமடைந்தனர்.

'மக்கள் பாதுகாப்பு வலய' பகுதிகளான புதுக்குடியிருப்பு, மாத்தளன், அம்பலவன் பொக்கணை மற்றும் இடைக்காடு ஆகிய பகுதிகளில் புதன்கிழமை அதிகாலை இருளில் 2. மணி தொடக்கம் 5 மணிவரை கொத்துக்குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆட்லெறி கொத்துக் குண்டுகள், மோட்டார் ஷெல்கள், பல்குழல் வெடிகள் என 200 க்கும் அதிகமான குண்டுகள் வீழ்ந்து வெடித்துள்ளன - அந்த இணையத்தளங்கள் மேலும் தெரிவித்தன.

நித்திரையில் இருந்த பெருமளவிலான மக்கள் படுகொலை செய்யப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 49 சிறுவர்களும், 21 [illegible] களும் அடங்குவர். அப்பகுதியில் [illegible] லங்கள் கேட்டன மக்களின் [illegible] [illegible]ங்குள்ள என்று 'புதினம்' இணையத்தளம் [illegible] தனது செய்தியாளரை மேற்கோள் காட்டி தகவல் வெளியிட்டிருக்கிறது.

இராணுவ போர்க் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சீர்திருத்தப் பள்ளி, மூதாளர் நலன் பேணலகம் மற்றும் சிறார், பெண்கள் பராமரிப்பு இல்லங்கள் ஆகியன மீது நடத்தப்பட்ட விமானத் குண்டுத் தாக்குதலில் 21க்கும் அதிகமான மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 71 பேர் காயமடைந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளால் போர்க் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட கடற்படை யினர், தரைப் படையினர் ஆகியோர் தடுத்து வைக்கப்படும் சீர்திருத்தப் பள்ளி மீதும் விமானங்களின் குண்டுகள் வீழ்ந்தன.

இதேவேளை, மூதாளர் நலன் பேணலகம், பெண்கள் உளவளப் பராமரிப்பு நிலையமான 'வெற்றிமனை', தாய்-சேய் பராமரிப்பு நிலையமான 'மலர்ச் சோலை', 'செந்தளிர்' சிறுவர் இல்லம், பாதிக்கப்பட்ட பெண்கள் பராமரிக்கப்படும் 'மேரி' இல்லம், 'நிறைமதி' இல்லம், 'அன்புமனை' தாய்-சேய் இல்லம், 'குருகுலம்' சிறுவர் இல்லம் என்பவற்றின் மீதும் பிற்பகலில் தாக்குதல் நடத்தப்பட்டன. இதில் 21 பேர் படுகொலை [illegible]ள்ள செய்யப்பட்[illegible] துடன் 71 பேர் காயமடைந்துள்ளனர்.

(படங்கள் 12 ஆம் பக்கத்தில்)

## ஈழத்தமிழருக்காக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது - 30) என்பவரே இவ்வாறு தீக்குளித்தவர் ஆவார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் இளம் சிறுத்தைகள் எழுச்சிப் பாசறை நிர்வாகியாக இருக்கும் இவர், ஏழு மாதக் குழந்தையின் தந்தை.

இலங்கையில் நடைபெற்று வரும் இனப் படுகொலை குறித்து மன அழுத்தத்தில் இருந்து வந்த இவர், கடந்த மாதம் வீட்டின் அருகில் உண்ணாநிலைப் போராட்டமும் நடத்தியுள்ளார்.

இந்நிலையில், மனைவியும் குழந்தையும் வேளாங்கண்ணி கோயிலுக்குச் சென்றிருந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட இவர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நேற்று புதன்கிழமை பிற்பகல் இலங்கையில் இனப் போரைத் தடுத்து நிறுத்தக் கோரியும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவும் கண்டன முழக்கங்களை எழுப்பியவாறும் உடலில் மண்ணெண்ணை ஊற்றிக் கொண்டு தீயிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து விரைந்து வந்த பொலிஸார் சோதியை அங்குள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். 90 வீதமளவிற்கு உடல் எரிந்துள்ளது என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

உயிருக்கு போராடி வரும் நிலையில் பொலிஸாரிடம் வாக்குமூலம் கொடுத்த தமிழ்வேந்தன் -

ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற எனக்கு வேறு வழி தெரியவில்லை. நான் அதிகம் படிக்காதவன். படித்தவர்கள் தொடர்ந்து ஈழத்தமிழர்களுக்காகப் போராடுங்கள். என்னைப்போல் யாரும் தீக்குளிப்பு முடிவை எடுக்காதீர்கள் எனக் கூறியிருக்கிறார்.

தீக்குளிப்பு முயற்சிக்கு முன்னதாக சோதி, திருமாவளவனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தீக்குளிப்பு முடிவு குறித்து தெரிவித்தார் எனவும், திருமா ஆறுதல் கூறியதுடன், அது போன்ற நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என்று வலியுறுத்தினார் எனவும், அதனையும் மீறி சோதி தீக்குளித்தார் எனவும் கூறப்படுகிறது.

வெளிவந்து விட்டது
பனரச - 2009
தரம் 3, தரம் 4, தரம் 5
மாணவர்களுக்குரிய "பாக்"
அன்னை புத்தகசாலை
இல. 7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 9881

கருத்தரங்கு - 1
பொருளியல் திரு.சண்
காலம்
23.02.2009 திங்கள் 1.30 pm - 4.30 pm
வெளிமாணவர்களும் பங்குபற்றலாம்
விவரங்கள், அனுமதிகள் அலுவலகத்தில்

இன்றைய எமது புதிய வரவுகள்
G.C.E. O/L Past Paper - 2008 and Model Papers
7 Papers (New Syllabus)
★ தமிழ் ★ விஞ்ஞானம் ★ வரலாறு ★ சமயம் ★ English
Rs- 230/=
Grammar Guide for G.C.E. O/L and A/L Student
Rs- 230/=
VERBS, PREPOSITIONS, ADVERBS, CONJUNCTION, ADJECTIVS
GENERAL ENGLISH-A/L Past Papers and Answer
Rs-250/=

PERSONAL CLASSES
364, Stanly Rd, Jaffna. (Near DMI)
GAQ, BA part I, Final. (யாழ்-பேராதனை)
தமிழ் - திரு. K.தர்மராஜா
Hin.Cul - திரு.சிறீ
Drama திரு.சிவரூபன்
Eco திரு. N.தயாபரன்
GAQ, BA part I ENGLISH
Revision and paper
R.MAHESWARAN (Dip.in.Eng.)
SPOKEN SINHALA
By. K.கார்த்திகேயன்
Sat, Sun-12-1
ஆரம்பம் 21.02.09
சனி காலை 9 மணி

பிரத்தியேக கணக்கீடு
51, வைமன் வீதி, நல்லூர் - சென்றல் கிளினிக் முன்பாக
வங்கியாளருக்கான CBF, DBF
A/L 2009, 2010, 2011 & 2009 Day
கணக்கீடு K.ஸ்ரீபரன் (BBA FM Spl.)
தொடர்புகளுக்கு: 0778275254
A/L 2009 Day கிரயக் கணக்கீடு நடைபெறுகின்றது.
HNDA, HNDM
★ Financial Acc (FM)
★ Management Acc (MA)
★ Cost & Mgt Acc
Medium ENGLISH & TAMIL
By: A.Nimal (H.N. Dip. Acc)
தொடர்புகளுக்கு: 0779184369
(சாவகச்சேரியிலும்)

CIMA
MCS
Supported By UNDP/JRRP
CIMA கற்கை நெறிகள் ஆரம்பம்
காலம்: 22 பெப்ரவரி 2009 மாலை 1 மணி
பதிவுகளை 21.02.2009 க்கு முன்பு மேற்கொள்ளவும்.
விபரங்களுக்கு- 324 Palaly Road, Near Parameswara junction,
Bus Root-764

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.